பக்கங்கள் 8

# ஈழநாடு

The Eelanaadu

60 சதம்

மலர் 23 | சித்திரை 16 | ஜ. ஆகிர் 22 | இதழ் 77

யாழ்ப்பாணம் | செவ்வாய்க்கிழமை | 28-4-1981

## போட்டியின்றித் தெரிவு

(கொழும்பு)

கண்டி, மாத்தறை, நுவரெலியா, குருநாகலை, மொனராகலை, கேகாலை, இரத்தினபுரி, ஆகிய 7 மாவட்ட அபிவிருத்திசபைகளுக்கு ஐக்கிய தேசியக்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்த மாவட்டங்களில் வேறு கட்சிகளோ, சுயேச்சைக் குழுவோ போட்டியிட முன் வராததையடுத்தே ஐக்கிய தேசியக்கட்சி இம்மாவட்ட சபைகளுக்கு போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டதாக தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

● ● ●

கொழும்பு மாவட்டத்தில், ஐக்கிய தேசிய கட்சியுடன் அகில இலங்கைத்தமிழ் காங்கிரஸ், சுயேச்சைக்குழுவொன்றும் போட்டியிடுகின்றன. மக்கள் ஐக்கிய முன்னணி, சுயேச்சைக்குழுவாக கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடுகிறது. (க)

★ ஏழு மாவட்டங்களில் ஐ.தே.க. ஏகமனதாகத் தெரிவு

★ கொழும்பில் ம. ஐ. முன்னணி சுயேச்சையாகப் போட்டி

# யாழ். மாவட்டத்தில் மட்டுமே கடும்போட்டி!

# திருமலை - அம்பாறையில் ஐதேக-கூட்டணி மோதல்

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாண மாவட்டத்திற்கான அபிவிருத்திசபைத்தேர்தலில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல்கட்சிகளான ஐக்கியதேசியக்கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ் மற்றும் சோஷலிசமுன்னணி (சுயேச்சைக்குழு 1) சிறுபான்மைத்தமிழர் ஐக்கியமுன்னணி (சுயேச்சைக்குழு- 2) ஆகியவை போட்டியிடுகின்றன.**

தேர்தல்கள் நடைபெறவிருக்கும் 17 மாவட்டங்களிலும் யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டுமே கட்சிரீதியாக மூன்று கட்சிகளும் சுயேச்சையாக இரண்டு குழுக்களும் போட்டியிடுகின்றன. இதற்கு அடுத்ததாக, அம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஐக்கியதேசியக்கட்சியுடன் மூன்று சுயேச்சைக் குழுக்கள் மோதுகின்றன.

நேற்றுக்காலை, தேர்தல் அதிகாரியான திரு யோகேந்திராதுரைசாமியிடம் நியமனப்பத்திரங்களை தாக்கல் செய்தனர். நேற்று நண்பகல் 12 மணிக்குப் பின்னர் ஐந்து நியமனப்பத்திரங்களும் உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொள்ளப்பட்டன.

சோஷலிச முன்னணிக்கு (சுயேச்சைக்குழு 1) தராசும் சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணிக்கு (சுயேட்சைக் குழு 2) குடையும் தேர்தல் சின்னங்களாக வழங்கப்பட்டன.

நேற்றுக்காலை 8-30 மணிக்கு முன்னாள் அமைச்சர் திரு செ. குமாரசூரியர், திரு ஆறுமுகம், சட்டத்தரணி என் நடராசா ஆகியோர் வந்து சோஷலிச முன்னணி கட்டுப்பணமான 28,000 ரூபாவை செலுத்தினர்கள். அதன்பின்னர் தேர்தல் அதிகாரி திரு யோகேந்திராதுரைசுவாமியிடம் நியமனப்பத்திரங்களை திரு குமாரசூரியர் தாக்கல்செய்தார். அச்சமயம் உதவிதேர்தல் அதிகாரி திரு. அ. ஜெயரத்தினமும் இருந்தார் இதன்பின்னர் திரு. குமாரசூரியர் தமது ஆதரவாளர்களுடன் சென்றுவிட்டார்.

நேற்றுக்காலை 10 மணிக்கு தமிழர்விடுதலைக் கூட்டணி செயலாளர் நாயகம் திரு அ. அமிர்தலிங்கம் நியமனப்பத்திரங்களை, தேர்தல்அதிகாரி திரு போகேந்திராதுரைசுவாமிபிடம் கையளித்தார். திரு அமிர்தலிங்கத்துடன் உதயசூரியன் சால்வைகள் அணிந்து சட்டத்தரணி எம். நடராசாவும், சட்டத்தரணி சி. நாகராசாவும் வந்திருந்தனர்.

தேர்தல் காரியாலயத்திற்கு வெளியில் மாவட்டசபை கூட்டணி வேட்பாளர்களும், யாழ் மாநகரசபை கூட்டணி உறுப்பினர்களும், கூட்டணி ஆதரவாளர்களும் கூடியிருந்தனர். நியமனப்பத்திரம் தாக்கல் செய்தபின்னர் திரு. அமிர்தலிங்கம், திரு. எஸ் நடராசா, திரு சி. நாகராசா ஆகியோர் வெளியில் வந்ததும் ஆதரவாளர்கள் வரவேற்று அழைத்துச்சென்றனர்.

அப்போது மழைதூறியதால் நல்ல சகுனம் என திரு. நாகராசா கூறினர்,

### காங்கிரஸ் வேட்பாளர்கள்

காலை 11 மணிக்கு தமிழ்க் காங்கிரஸ்கொடிகளைத் தாங்கிய கார்களிலும், வான்களிலும் காங்கிரஸ்வேட்பாளர்களும் ஆதரவாளர்களும் கச்சேரியை வந்தடைந்தனர். வேட்பாளர்கள் காங்கிரஸ் "பட்ஜ்" அணிந்திருந்தனர் காங்கிரஸ் பட்டியலில் இரண்டாவது இடம்பெற்ற சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் தமிழ்க்காங்கிரஸ் தலைவர் திரு. எஸ். ஆர் கனகநாயகத்துடன் வந்து நியமனப்பத்திரங்களை தாக்கல் செய்தார்.

சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம், சட்டத்தரணி எஸ். ஆர் கனகநாயகம் ஆகியோர் வெளியில் வந்ததும், ஆதரவாளர்கள் மாலைசூட்டி வரவேற்று அழைத்துச்சென்றனர்.

### சிறுபான்மைத்தமிழர் ஐக்கிய முன்னணி

இதன் பின்னர் காலை 11-30 மணிக்கு சிறுபான்மைத்தமிழர் ஐக்கிய முன்னணி சார்பில் திரு ஜே அன்ரனி, சட்டத்தரணி பி. சதாசிவரத்தினம், திரு எம். வி. நடராசா ஆகியோர் வந்து கட்டுப்பணமாக 28,000 ரூபா செலுத்தினர்கள். இதன் பின்னர் திரு. பி. ஜே. அன்ரனி நியமனப்பத்திரத்தை தாக்கல் செய்தார். சிறுபான்மைத் தமிழர் ஐக்கியமுன்னணி சார்பில் போட்டியிடும் திருமதி

(8-ம் பக்கம் பார்க்க)

(கொழும்பு)

மாவட்ட அபிவிருத்தி சபைகளுக்கு நடைபெறும் தேர்தல்களில், ஏழு மாவட்டங்களில் ஐ தே கட்சி வேட்பாளர்கள் அபிவிருத்திச்சபை உறுப்பினர்களாக ஏகமனதாக நேற்று தெரிவு செய்யப்பட்டு விட்டதால், மிகுதியாகவுள்ள 17 மாவட்டங்களில் மட்டுமே ஜூன் 4ந் திகதி தேர்தல்கள் நடைபெறுமென்று தேர்தல் ஆணையாளர் நேற்று அறிவித்தார்

தேர்தல் நடைபெறும் 17 மாவட்டங்களில் திருகோணமலையிலும், அம்பாறையிலும் தமிழர் விடுதலைக்கூட்டணியும் ஐக்கிய தேசியக் கட்சியும் நேரடியாக மோதிக்கொள்கின்றன.

ஏனைய மாவட்டங்களில் சுயேட்சைக் குழுக்களுடன் ஐ தே கட்சி மோதிக்கொள்கின்றது

ஸ்ரீ ல சுதந்திரக்கட்சி போட்டியிலிருந்து வாபஸ் பெற்றபோதிலும் மாத்தளையில் சுதந்திரக்கட்சி வேட்பாளர்கள் கடந்த வெள்ளிக்கிழமை நியமனப் பத்திரங்களை தாக்கல் செய்ததால் இக்கட்சியும் மாத்தளையில் போட்டியிடுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## மட்டக்களப்பில் சுயேச்சைக்குழு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில், ஐக்கியதேசியக்கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் சுயேச்சைக் குழுவொன்றும் போட்டியிடுகிறது.

இந்த சுயேச்சைக் குழுவில் மட்டக்களப்பு இரண்டாவது எம். பி ஜனாப் பரீத் மீராலெப்பையின் சகோதரர் ஜனாப் எம் ரபாத் போட்டியிடுகின்றார் போட்டியிடும் ஏனைய மூவரும் முஸ்லிம்களே.

**அரிய சந்தர்ப்பம்!**

றேடியோ - டெலிவிஷன் ஏயர் கொண்டிசனிங், வெல்டிங், மூன்றுமாத டிப்ளோமா பயிற்சிகள். ஆரம்பம்: 2-5-81. அனைவரும் சேரலாம்.

**நாஷனல் அக்கடமி,**

11, மொம்சாக் கட்டிடம்,

ஸ்ரான்லி வீதி 9003) யாழ்ப்பாணம்.

**வீடியோ கசெற் இல் புதிய தமிழ் படங்கள்**

**முரட்டுக்காளை**

**ஜானி**

வாடகைக்கு கிடைக்கும்

(தனிப்பட்ட பாவனையாளர்களுக்கு மாத்திரம்)

வாடகை 1 நாளுக்கு 60/-

வைப்புப்பணம் (Deposit) 750/-

**'துர்க்காஸ்'**

றெக்கோடிங் (B) பார்

68, கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்.

8997

## ஒரே பார்வையில்....

ஜூன் மாதம் நான்காம் திகதி தேர்தல் நடைபெறவிருக்கும் மாவட்டங்களும், மோதும் கட்சிகளும் சுயேச்சைகளும் வருமாறு:

| மாவட்டம் | போட்டியிடும் கட்சிகள் |
|---|---|
| கொழும்பு | ஐ. தே. க. - த காங்கிரஸ் - சுயேட்சை |
| யாழ்ப்பாணம் | ஐ. தே. க. - கூட்டணி - த. காங்கிரஸ் - சுயேட்சை (2) |
| மன்னார் | ஐ தே க - கூட்டணி - த காங்கிரஸ் |
| முல்லைத்தீவு | ஐ தே க - கூட்டணி - த. காங்கிரஸ் |
| திருகோணமலை | ஐ தே க - கூட்டணி |
| வவுனியா | ஐ தே க - கூட்டணி - த காங்கிரஸ் |
| அம்பாறை | ஐ தே க - கூட்டணி |
| பதுளை | ஐ. தே. க. - சுயேச்சை |
| கம்பஹா | ஐ. தே. க. - சுயேச்சை |
| காலி | ஐ. தே. க. - சுயேச்சை |
| அம்பாந்தோட்டை | ஐ. தே. க. - சுயேச்சை (3) |
| களுத்துறை | ஐ. தே. க. - சுயேச்சை (2) |
| மாத்தளை | ஐ. தே. க. - ஸ்ரீ. ல. சு. கட்சி - சுயேச்சை (2) |
| அனுராதபுரம் | ஐ. தே. க. - சுயேச்சை |
| புத்தளம் | ஐ. தே. க. - சுயேச்சை |
| மட்டக்களப்பு | ஐ. தே. க. - கூட்டணி - சுயேச்சை |

# வரி விளம்பரம்


## கல்வி

முற்றிலும் புதிய நிருவாகத்தின் கீழ் இயங்கும் எமது தொழில் பயிற்சி நிறுவனத்தில் குறுகியகால 'குளிரூட்டல்' பயிற்சி நெறிக்கு மாணவர்கள் சேர்க்கப்படுகிறார்கள். முழுநேர பயிற்சிகளும் காலை, மாலை, வாரஇறுதி வகுப்புக்களும் உண்டு விபரங்கட்கு. ஐ. எ. ஆர், 615, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் 8949

## தேவை

35 MM கமரா தேவை. தொடர்பு; கே. வீ. சாமி, 418 (772), ஆஸ்பத்திரி ரோட், யாழ்ப்பாணம். 8987

லொறி, ட்ராக்டர், கார் வாகனங்கள் செலுத்தக்கூடிய டிரைவர் தேவை கொள்முதல் செய்வதற்கும் எடுத்துச் செல்வதற்கும் ரொக்கமாக்குவதற்கும் சிறப்பான உத்தரவாத மும், சிபார்சும் பெற்றிருத்தல் அவசியம் பிணை செலுத்தக்கூடியவர் விரும்பப்படுவர் விண்ணப்பிக்கவும். எல்மோசன் ஹாரன் ஸ்ரீல் கொம்பனி லிமிட், பெரிய விளான், பண்டத்தரிப்பு. 8999


## சிசுவை மீட்டுத்தருமாறு 7 பிள்ளைகளின் தாயார் புகார்

(பண்டத்தரிப்பு)

தம்மை அடித்துத் துன்புறுத்தி வீட்டைவிட்டுத் துரத்திய தமது கணவர் தம்மிடமிருந்த 10 மாதச்சிசுவை பறித்துச் சென்று விட்டதாகவும், குழந்தையை அவரிடமிருந்து மீட்டுத் தம்மிடம் ஒப்படைக்குமாறும் கோரி சுதுமலையைச் சேர்ந்த ஏழுபிள்ளைகளின் தாயார் ஒருவர் ஆனைக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

தமது கணவரான ஆறுமுகம் சுப்பிரமணியம் என்பவர் தம்மைத் துன்புறுத்தியதினால் அவரை விட்டுப் பிரிந்து தமது 10 மாத ஆண்குழந்தையுடன் சுதுமலையிலுள்ள தமது தாய் வீட்டில் வசித்து வந்ததாகவும் நேற்று முன் தினம் தமது கணவர் திடீரென அங்குவந்து தமது 10 மாத சிசுவைப்பறித்துச் சென்று விட்டதாகவும் சுப்பிரமணியம் பூமலர் என்னும் பிரஸ்தாபத்தாய் தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். ஆனைக்கோட்டை பொலிசார் விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.

## ஓய்வு பெற்றார்

(மன்னார்)

மடு வீதி ரயில் நிலைய அதிபர் திரு தி. வல்லிபுரம் இம் மாதம் முதல் தமது பதவியிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார் இவரது இடத்திற்கு பளை ரயில் நிலைய அதிபர் திரு. டி. சற்குணசிங்கம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் (அ)

மன்னாரில்

## 24 மணிநேரமும் மின்சாரம் கிடைக்கும்

(மன்னார்)

அடிக்கடி இருளில் மூழ்கி வரும் மன்னார்ப் பட்டினம் விரைவில் 24 மணி நேரமும் மின்சாரம்பெறவுள்ளது. இதற்காக சக்தி கூடிய புதிய ஜெனரேட்டர் ஒன்று இணைக்கப்படவுள்ளதாக மன்னார் பட்டினசபை விசேஷ ஆணையாளர் திரு. எஸ் தீனதயாலால் தெரிவித்தார். (அ)


வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

யாழ். நகரில் நிலவும் பற்றுக்குறையை நிறைவு செய்ய
பெருமளவில் தருவித்துள்ளோம்.
உங்களுக்குத் தேவையான
இலங்கை ஒட்டுப்பலகை கூட்டுத்தாபனத்தின்
* கதவு * சிப்போட் (பல அளவுகளில்)
போன்றவற்றுக்கு முந்துங்கள்
நாபன்ஸ் ரேட்ஸ்,
(சேகரம் கட்டிடம்)
74, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். போன்: 8162

அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்

குற்றி மர விநியோகத்தில் புதிய நடைமுறை

இதுவரை காலமும் நடைமுறையில் இருந்து வந்த உத்தரவுப் பத்திரத்தின் மூலம் குற்றிமரம் விநியோகம் செய்யும் வழக்கம் மறு அறிவித்தல் வரை நீக்கப்பட்டுள்ளது. தேக்கு, முதிரை தவிர்ந்த, ஏனைய மரங்கள் யாவும் கீழ்க்காணும் குடாநாட்டு மரக்காலைப் பொறுப்பதிகாரிகளினால் உத்தரவுப்பத்திரமின்றி விற்பனை செய்யப்படும்.

தற்போது கூட்டுத்தாபன முகவர் நிலையங்களில் நடைமுறையில் இருந்துவரும் இம்முறை, பொதுமக்களுக்கு மேலும் வசதிகளை வழங்கும் நோக்குடன் கூட்டுத்தாபன மரக்காலைகளிலும் நடைமுறைப்படுத்தப்படவிருக்கின்றது.

| | | |
|---|---|---|
| 1 | யாழ்ப்பாணம் | திரு. இ. சொலமன்ஸ் |
| 2. | சுன்னாகம் | திரு. சி. சி. ஜெ. ஜெயராஜா |
| 3. | காங்கேசன்துறை | திரு. ஆர் இளையதம்பி |
| 4. | சங்கானை | திரு. சி நடராஜா |
| 5 | வல்வெட்டித்துறை | திரு. எஸ். சின்னத்துரை |
| 6. | கொக்குவில் | திரு. வீ கதிரவேல் |
| 7 | வட்டுக்கோட்டை | திரு. எஸ் யோகபாலன் |
| 8. | நல்லூர் | திரு. வ. மாணிக்கலிங்கம் |

வீடுகட்டுவோர், மரத்தளபாடம் செய்வோர், மரத்தொழில் புரிவோர் மற்றும் ஏனையோர் தங்கள் தேவைகட்கு மேற்குறிப்பிட்ட மரக்காலைப் பொறுப்பதிகாரிகளை சந்தித்து கிழமைநாட்களிலும் சனிக்கிழமைகளிலும் தங்களது தேவைகளைப் பூர்த்தி செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பிரதேச முகாமையாளர்,
வடபிரதேசம்,
அரசாங்க மரக்கூட்டுத்தாபனம்,
தொலைபேசி: 349 யாழ்ப்பாணம். 25, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம்.
(8996)


## "ஐ. தே. க.வின் வெற்றிக்காக இன மத வேறுபாடின்றி கடுமையாக உழையுங்கள்"
### அமைச்சர் தேவநாயகம் கோருகிறார்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஐக்கிய தேசியக்கட்சியின் வெற்றிக்காக சகல மக்களும் இன, மத வேறுபாடின்றி ஒற்றுமையுடன் செயல்படவேண்டும்.

இவ்வாறு உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் திரு கே. டபிள்யூ. தேவநாயகம் செங்கலடி- கட்டுமுறிவில் பஸ்சேவை ஒன்றை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் வேண்டுகோள்விடுத்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

இன்றைய அரசாங்கத்தின் காலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் பல அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எங்கள் ஜனாதிபதி திரு. ஜே ஆர். ஜெயவர்த்தன கிழக்கு மாகாண மக்கள்மேல் நம்பிக்கை கொண்டுள்ளார். அவரின் நம்பிக்கைக்கு ஏற்ப நாம் மாவட்ட அபிவிருத்திசபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சியின் வெற்றிக்காக உழைக்க வேண்டும்.

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி சபைத்தேர்தலில் மூன்று தமிழர்களும், ஒரு முஸ்லிமும் ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

இரண்டாம் இடம் பெறுகின்ற முஸ்லிம் வேட்பாளரின் வெற்றிக்காக முஸ்லிம் வாக்காளர்கள் 1970ம் ஆண்டு பொது தேர்தலில் மட்டக்களப்பு தொகுதியில் பிரிந்து நின்று வாக்களித்தது போல் அளிக்காமல் ஒற்றுமையுடன் செயல்பட்டு ஐக்கிய தேசியக் கட்சியின் வெற்றிக்காக உழைத்து மாவட்டத்தை அபிவிருத்தி செய்ய அரசுக்கு உதவ வேண்டும். [இ]

## வேலைநிறுத்தத்தினால் பாதிக்கப்பட்டோர் நிலை; விரைவில் சுமுகமுடிவு
### பிரதி அமைச்சர் உறுதி

[யாழ்ப்பாணம்]

கடந்த ஆண்டு வேலைநிறுத்தத்தினால் பாதிக்கப்பட்டோரின் பிரச்னைக்கு விரைவில் சுமுகமான தீர்வு ஒன்று ஏற்படும் என்று உள்நாட்டலுவல்கள் பிரதி அமைச்சர் திரு பேர்ஸி உறுதியளித்துள்ளார்.

யாழ். விஜயம் செய்த திரு. பேர்ஸி சமரவீர தம்மைச் சந்தித்த வேலை நிறுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சங்கத் தலைவர் திரு த நமசிவாயத்தின் தலைமையிலான குழுவினரிடமே மேற்கண்டவாறு உறுதி அளித்தார்.

வடபிராந்திய ஐக்கிய தேசியக்கட்சியின் தொழிற்சங்க சம்மேளனத்தலைவர் திரு. ய அமிர்தலிங்கத்தின் ஏற்பாட்டின் பேரில் அவரது இல்லத்தில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின்போதே மேற்கண்ட உறுதி அளிக்கப்பட்டது

வேலை இழந்தோரின் நிலை குறித்து திரு அமிர்தலிங்கமும் அக்குழுவினருடன் சேர்ந்து பிரதி அமைச்சரிடம் விரிவாக எடுத்துக் கூறினார்.

வேலை இழந்தோரின் பட்டியல் அடங்கிய மகஜர் ஒன்றையும் திரு நமசிவாயம் பிரதி அமைச்சரிடம் கையளித்தார். [இ]

## பேசாலைக்கு விரைவில் மின்சாரம்; செலவை தேவாலயம் வழங்கும்

(மன்னார்)

பேசாலைப் பகுதிக்கான மின்சார விநியோகம் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்கான செலவுகளை பேசாலை புனித வெற்றிநாயகி ஆலயம் வழங்கவுள்ளது.

கடந்த 4 வருடங்களுக்கு முன் பேசாலைப் பகுதிக்கு பேசாலை கிராமாட்சிமன்றத்தினால் மின்சாரம் வழங்கப்பட்டு வந்தது. தற்போது மின்சார யந்திரங்கள் பழுதடைந்ததால் பேசாலை கிராமாட்சி மன்றம் மின்சாரம் வழங்குவதை கடந்த 4 வருடங்களாக நிறுத்திவிட்டது.

பேசாலைக் கிராமாட்சிமன்ற விசேஷ ஆணையாளர் திரு வே. சண்முகநாதனும், பேசாலை சனசமூக நிலையமும் எடுத்த முயற்சியை அடுத்து பேசாலை மீன்பிடிக் கூட்டுத்தாபனத்திலிருந்து கிராமாட்சி மன்றம் ஊடாக பேசாலைப்பகுதிக்கு மின்சாரம் வழங்கப்படவுள்ளது.

பேசாலைப்பகுதிக்கு மின்சாரம் வழங்க சுமார் 2 லட்சம் ரூபா செலவிட வேண்டும். அந்த செலவிற்கான பணத்தை பேசாலை புனித வெற்றி நாயகி ஆலயத்திலிருந்து பேசாலை கிராமாட்சி மன்றத்திற்கு வழங்கப்படும். (அ)

## 50 வீதம் சித்தி

## மன்னார்பாடசாலை ஒன்றின்சாதனை

(மன்னார்)

கடந்த வருடம் டிசம்பர் மாதம் நடைபெற்ற க. பொ. த. பரீட்சையில் மன்னார் சித்தி விநாயகர் இந்துக்கல்லூரி மாணவர்களில் 50 வீத மாணவர் உயர் வகுப்பு கல்வியை மேற்கொள்ளுவதற்கான சித்தியடைந்துள்ளனர் இவர்களில் ஒரு மாணவர் ஒரு விசேஷ சித்தியும், 6 திறமைச் சித்தியும் பெற்று மன்னார் மாவட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளார். [அ]

## சமமாக முடிந்த போட்டி

(இணுவில்)

நவற்குழி கிழக்கு காந்தி சனசமூக நிலையத்தாரின் புதுவருட விளையாட்டுப் போட்டியை முன்னிட்டு சனசமூக நிலையத்தின் இளைஞர்களுக்கும் திருமணமானவர்களுக்கும் இடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான மென்பந்து கிரிக்கட் போட்டி சரிசமமாக முடிந்தது மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியை அப்பகுதிப் பெண்களும் வயோதிபர்களும் கூடிமிக உற்சாகத்தோடு கண்டுகளித்தனர் இப்போட்டியில் திரு சி சங்கரராசாவும், செல்வன் வ அழகராசாவும் கப்டன்களாகக்கடமையாற்றினார்கள்.

## இடமாற்றம்

(மண்முனை)

மண்முனை தென்போரதீவு உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ் ஜெகநாதன் வவனியா செட்டிகுளம் பகுதிக்கு தற்போது இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

# பாகிஸ்தான் ஒருபோதும் இந்தியாவைத்தாக்காது!

## அமெரிக்க ஆயுதவிநியோகம் குறித்து அஞ்சுவதில் அர்த்தமில்லை என்று கூறுகிறார் ஆஹாஷாக்கி

இஸ்லாமாபாத், ஏப் 27

**பாகிஸ்தான் எக்காரணம் கொண்டும் எக்காலத்திலும் இந்தியா மீதுதாக்குதல் நடத்தாது. இது குறித்து இந்தியா அச்சம் கொள்ளத் தேவையில்லை.**

இவ்வாறு பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சர் ஜனுப் ஆஹாஷாக்கி தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் அமெரிக்காவிடமிருந்து ஆயுதங்களை வாங்கி தனது ஆயுத பலத்தைப் பெருக்குவதினால் அது இந்தியா மீது தாக்குதல் நடத்தும் என்று இந்தியா பயப்படுவதல் அர்த்தமில்லை என்றும் ஜனுப் ஷாக்கி தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்குமிடையேயான நல்லுறவு குறித்து இரு நாட்டு அதிகாரிகளுக்குமிடையே பேச்சுவார்த்தை நடத்துவதை பாகிஸ்தான் பெரிதும் விரும்புகிறது என்றும் ஜனுப் ஆஹாஷாக்கி கூறினார். (இ)

# காப்புறுதியில் யாழ். முதலிடமாம்

(யாழ்ப்பாணம்)

"அரசாங்கம் பல்வேறு சேமிப்புத் திட்டங்களை உருவாக்கிக் கொடுத்தாலும் விதவைகளுக்குபாதுகாப்பளிப்பது காப்புறுதி மட்டுமே காப்புறுதித்திட்டங்கள் மக்களுக்குச் சேவை செய்வதற்காகவே அமைந்துள்ளன என்று இலங்கைகாப்புறுதிக் கூட்டுத்தாபனப் பிராந்திய முகாமையாளர் திரு என். நவரத்தினம் யாழ்ப்பாணம் றிம்மர் மண்டபத்தில் நடைபெற்ற காப்புறுதி முகவர்களுக்கு பரிசளிக்கும் வைபவத்திற்கு தலைமை வகித்துப்பேசுகையில்...

(6-ம் பக்கம் பார்க்க)

## மன்னார்-பெரியமடு பஸ் சேவை

(மன்னார்)

மன்னார்-பெரியமடு கிராமம் நேரடி பஸ் சேவையை மன்னார் சாலை அத்தியட்சகர் திரு. சண்முகானந்தன் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

இச் சேவை தினமும் மாலை 6-15 மணிக்கு மன்னாரிலிருந்து பெரியமடுவுக்குச் செல்லும் இதே போல் தினமும் பெரிய மடுவிலிருந்து காலை இப்பஸ் வண்டி மன்னாருக்குத்திரும்பும்.

## மாவட்டசபைத் தேர்தல்:

# அதிகவாக்கு பெறுபவருக்கே பட்டியலில் முதலிடம்

## தேர்தலின் பின் மாற்றி அமைக்க தமிழ்க்காங்கிரஸ் முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திலுள்ள 14 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் மாவட்ட அபிவிருத்தி சபை தேர்தலில் கூடிய வாக்குகள் எடுப்பார்களே பட்டியலில் முன்வரிசை பெறுவார்கள் இன்றைய பட்டியலுக்கு பதிலாக தேர்தலின் பின் மற்றொரு பட்டியல் சமர்ப்பிக்கப்படும்.

தமிழ்க் காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. குமார் பொன்னம்பலம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முழுப்பட்டியலுக்கு பதிலாக மற்றொரு பட்டியலை தேர்தலின் பின் தாக்கல் செய்ய தேர்தல் சட்டம் வழிவகுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இத்திட்டத்தை தமிழ் காங்கிரஸ் நிர்வாகக்குழுவும் வேட்பாளர்களும் ஏகமனதாக ஏற்றுள்ளதாகவும் அவர் கூறினார். (க)

## பயிற்சி வகுப்பு

(மண்முனை)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 30 இளம் யுவதிகளுக்கு "சுய தொழில் வாய்ப்பும் கிராம அபிவிருத்தியும்" என்னும் விடயம் பற்றி ஒரு வாரகாலப்பயிற்சி வகுப்பொன்று கடந்த 21ந் திகதி மட்டக்களப்பு கிராமஅபிவிருத்திப் பயிற்சி நிலையத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## பஸ் விபத்து

(அனுராதபுரம்)

அனுராதபுரம் மாவட்டத்திலுள்ள கோணஹவவஎனும் இடத்தில் கடந்த சனிக்கிழமை பிராந்திய போக்குவரத்து சபையைச் சேர்ந்த பஸ்கள் மோதியதால் ஏற்பட்ட விபத்தில் ஒருவர் ஸ்தலத்தில் மரணமானார். 80பேர் காயமடைந்தனர் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் காயமடைந்தவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# கரணவாய் பகுதியில் சுய உப்பு விளைச்சல்!

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிப் பகுதியில் உள்ள கரணவாய் என்னும் இடத்தில், சுய உப்பு விளைச்சலினால், தேசிய உப்புக் கூட்டுத்தாபனத்துக்கு மூன்று லட்சம் ரூபா லாபம் கிடைத்துள்ளது.

கடந்த வருட நடுப்பகுதியில் நிலவிய கடும் வரட்சி காரணமாக, வடமராட்சிப் பகுதியிலுள்ள கரணவாய் என்னும் பகுதியில் சுயஉப்பு விளைச்சல் ஏற்பட்டது. இப்பகுதியில் சில வருடங்களுக்கு முன்னரும் அரசாங்க உப்பு அல்லாகா உப்பு சேகரித்து விற்பனை செய்து வந்தது குறிப்பிடத்தக்கது இதன் பலனாக கடந்த வருடம் தேசிய உப்புக் கூட்டுத்தாபனம், கடும் முயற்சி காரணமாக 15,000 அந்தருக்கு அதிகமான உப்பை சேகரித்து, அவ்விடத்தில் மேடையமைத்துக் குவித்தது இந்த உப்பு விற்பனை செய்யப்பட்டு கூட்டுத்தாபனம் மூன்று லட்சம் ரூபாவரை லாபம் பெற்றதாக ஒரு அதிகாரி தெரிவித்தார்.

இவ்வருடமும் கடந்த ஜனவரி மாதம் முதல் யாழ்,மாவட்டத்தில் நிலவி வரும் கடும் வரட்சிகாரணமாககரணவாய்ப் பகுதியில் உப்பு விளைச்சல் ஆரம்பமாகியுள்ளது தற்போதைய வரட்சி நீடிக்குமானால், இப்பகுதியில் கடந்த வருடத்தைப் பார்க்கிலும் பன்மடங்கு உப்பு சேகரிக்க முடியும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இது சம்பந்தமாக உப்புக் கூட்டுத்தாபன நிர்வாகம் உடனடி நடவடிக்கை எடுக்காவிட்டால் திறந்த வெளியில் விளைந்திருக்கும் உப்பை பொதுமக்கள் சேகரித்துச் செல்வதால் கூட்டுத்தாபன வருமானம் பெரிதும் பாதிக்கப்படும் என்று அஞ்சப்படுகிறது மேலும் அப்பகுதியில் உள்ள நூற்றுக்கணக்கானோரின் வேலை வாய்ப்புக்கும் பங்கம் ஏற்படும் ஆபத்தும் உண்டு தற்பொழுது உப்பு விளைய ஆரம்பித்திருக்கும் நிலையைக் கருத்திற்கொண்டு உப்புக் கூட்டுத்தாபனம் தீவிர நடவடிக்கை எடுக்குமானால், இவ்வருடம் ஒருகோடி ரூபா வரை நிகர லாபம் பெற வாய்ப்புகள் உண்டு என்று தேசிய உப்புக் கூட்டுத்தாபனம் எதிர்பார்க்கிறது.

யாழ்.குடாக்கடல் நன்னீர்த் திட்டம் தீவிரமாகச் செயற்படாதபட்சத்தில், கரணவாய் உம்பளத்தை மாவட்ட அபிவிருத்திச்சபை அமைப்பின் கீழ் புனர்நிர்மாணம் செய்தால், வடமராட்சிப் பகுதி மக்களுக்கு வேலை வழங்கும் வாய்ப்போடு, அரசாங்கத்திற்கும் குறைந்த செலவில் நிறைந்த லாபம் பெற வாய்ப்பு உண்டு என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

# இளவாலையில் இராணுவ அனர்த்தம்? 'அமிர்' தெரிவித்த தகவல்

(யாழ்ப்பாணம்)

இளவாலைப் பகுதியில், இராணுவத்தினரால் அனர்த்தங்கள் விளைவிக்கப்பட்டதாகக் கூறப்படும் இடங்களை, எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம், நேற்று முன்தினம் பிற்பகல் சென்று பார்வையிட்டார்.

இரு இளைஞர்களைத்தேடிச் சென்ற இராணுவத்தினர், ஒரு வீட்டு வளவில் 200 இளநீரையும், மற்றொரு தோட்டத்தில் 250 ரூத்தல் திராட்சைப்பழத்தையும் பறித்துச் சென்றதாகவும் எதிர்க்கட்சித்தலைவருக்கு கிடைத்த புகாரைத் தொடர்ந்தே அவர் நேரில் சென்று பார்வையிட்டார்.

இத்தகவலை எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், யாழ்ப்பாணத்தில் நடந்த விக்கிரமசிங்கா பிறந்ததின விழாவில் தெரிவித்தார். (க)




இதோ, லக்ஸபானவிலிருந்து ஒரு புதிய,அதிக சக்திவாய்ந்த சாதனம்.
நீங்கள் அதிக நேரம் உங்கள் டிரான்ஸிஸ்டரை
துல்லியமாக கேட்டு மகிழ, இந்த புதிய லக்ஸபான பற்றறிக்கு நாம்
அரிய செயல்கள் பல செய்துள்ளோம்.

ஆகவே, நாடுங்கள் சக்தியை —
சக்தியின் சின்னம், புத்தம் புதிய லக்ஸபான டிரான்ஸிஸ்டர் பற்றறி.

பெயரைச் சொல்லிக் கேளுங்கள், —புதிய லக்ஸபான டிரான்ஸிஸ்டர் பற்றறி.

அதிக சக்திக்கு — லக்ஸபான.

**விலை: ரூபா 3-20 (ஒவ்வொன்றும்)**

**மணிவாக்கு**

எண்ணத்தில் வளர்ச்சியடையாதவன் வாழ்வில் முன்னேற்றமடையான்.

—அருள்விருந்து

# நமது நோக்கு

## இந்துசமுத்திர அமைதிப் பிரதேசம்

இந்து சமுத்திரத்தை அமைதிப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்த வேண்டுமென்ற கோரிக்கைக்குக் குரலெழுப்பிய பெருமை இலங்கைக்குரியது.

சர்வதேச விவகாரங்கள் மோசமான நிலைமையை அணுகினால் இந்து சமுத்திரப் பிரதேசம் பரபரப்படைவது இயற்கை.

அண்மையில் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி மூன்றாவது உலக யுத்தம் ஆரம்பமாகும் அறிகுறிகள் பற்றி எச்சரிக்கை விடுத்திருக்கிறார். பாகிஸ்தானுக்கு அமெரிக்க ராணுவ உதவி வந்து கொட்டுண்ணுவதாகப் பிரஸ்தாபிக்கும் இந்தியப் பிரதமர் வல்லரசுப் போட்டியின் உச்சநிலையைக் காண்பது வெறும் பகற்கனவென்று கொள்வதற்கில்லை.

இந்து சமுத்திர அமைதிப் பிரதேசப் பிரகடனத்தை அமுல் நடத்தும் ஐ. நா. குழுவுக்குத் தலைமை தாங்கும் பொறுப்பு இலங்கையைச் சார்ந்தது. கொழும்பில் நடக்கவேண்டிய பொறுப்பான கூட்டம் நீண்டகாலம் பின் போடப்பட்டு வருவது பெரும் சர்ச்சைக்குரியதாய்விட்டது.

புதுடில்லியில் நடந்தேறிய அணிசேரா மாநாட்டில் அமெரிக்காவுக்கு எதிரான டீகோகார்ஸியா பற்றிய இராணுவ விவகாரங்கள், பிரேரணையில் இடம் பெறக்கூடாதென்று இலங்கை வாதாடியது. காரணம்; அமெரிக்கா அதைச் சாட்டாக வைத்து கொழும்பு சிறப்புக் குழுக் கூட்டத்தைப் பகிஷ்கரிக்கக் கூடுமென்பதே அணிசேரா மாநாடு அதனை ஏற்றது. எந்த விதத்திலும் இந்து சமுத்திரப்பிரகடனக் குழுக் கூட்டம் கொழும்பில் நடக்க வேண்டுமென்பதே.

இன்று இந்தியப் பத்திரிகைகளும் பிரிட்டிஷ் வானொலிச் செய்தியும் இலங்கையின் அணிசேராக் கொள்கையில் சந்தேகம் கிளப்புகின்றன. அமெரிக்க பக்கம் சார்வதாக இலங்கை பற்றிக் குறிப்பிடுகின்றன.

அமெரிக்கா இலங்கைக்கு நிதி உதவி வழங்குகிறது; இலங்கையின் ஆட்சிமுறைக்குத் துதிகூறுகிறது. திருகோணமலையில் அமெரிக்கக் கடற்படைக்குப் புகலிடமும், கடற்படை வீரர்களுக்கு இளைப்பாறுவதற்கும் பொழுது போக்குவதற்கும் தக்க வசதிகள் கோருகிறது. இவையெல்லாம் இந்தியாவிலும் இந்நாட்டிலும் பலத்த சந்தேகத்தை எழுப்பியிருக்கின்றன.

இலங்கையிலும் பார்க்க இந்தியாவுக்கே இந்து சமுத்திர அமைதி பாரதூரமான விடயமென்று இந்தியப் பத்திரிகைகள் நெருப்புக் கக்குகின்றன. இலங்கை விடயம் எவ்வாறாயினும் இப்பிரதேசத்தில் இந்தியாவுக்கே பொறுப்புக் கூடியதென்ற காரணத்தால் இந்தக் கொழும்பு மகாநாட்டை உடனடியாகக் கூட்டவேண்டுமென்று குரலெழுப்பப்படுகின்றது.

இந்நாட்டிலும் பாராளுமன்றத்தில் இவ்விடயம பிரஸ்தாபிக்கப்பட்டது. எதிர்க் கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் இவ்விடயம் பற்றி அரசாங்கத்துக்கு அறிவுரை வழங்கியிருப்பது எமது கவனத்துக்குரியது.

இவ்விடயத்தில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் ஒத்த கருத்திருக்கவேண்டிய அவசியத்தை நாம் வற்புறுத்துகின்றோம். எந்த விதத்திலும் வல்லரசுப் போட்டிகளுக்கு எங்கள் நாட்டின் துறைமுகங்கள் மறைமுகமாக உதவுமானால் பாங்கொக், ஹொங்கொங் போன்ற இடங்களுக்கு நேர்ந்த கதி இந்த அழகிய அமைதியான தீவுக்கு நேருமென்பது நிச்சயம்.

## நவசமசமாஜகட்சியுடன் மூன்று தொழிற்சங்கங்கள் இணைந்து மேதினம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை ஆசிரியர் சங்கம், பொது அரசாங்க லிகிதர் சங்கம், மத்திய வங்கி ஊழியர் சங்கம் ஆகிய மூன்று சங்கங்களும் நவ சமசமாஜக் கட்சியுடன் இணைந்து யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் மேதினத்தைக் கொண்டாட முடிவுசெய்துள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்க மாவட்டக்கிளைப் பொதுச்செயலாளர் திரு. ரி. தேவராசா தெரிவித்துள்ளார்.

மூன்று தொழிற்சங்கங்களும் பின்வரும் தீர்மானங்களுடன் நவசமசமாஜக் கட்சியுடன் உடன்படிக்கைகள் செய்துள்ளதாகவும் திரு. தேவராசா வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

"புரட்சிகர அரசாங்கத்தை அமைப்பதற்கு தொழிலாளிகள் - விவசாயிகள் ஆகியோரை ஒன்றிணைப்பது;

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டுச் சேராமல் இருப்பது;

பொதுசன ஒடுக்குமுறைக்கும், விலைவாசி உயர்வு, வேலை நீக்கத்திற்கும் எதிராகப் பொது மக்களைத் திரட்டுதல்;

தமிழ்த் தேசிய இனத்தின் சுய நிர்ணய உரிமையை அங்கீகரித்தல்;

சகல தோட்டத் தொழிலாளர்களுக்கும் பிரஜாவுரிமை வழங்குதல்.

வேலைநீக்கம் செய்யப்பட்ட சகல தொழிலாளர்களையும் மீண்டும்வேலைக்குச்சேர்த்தல்"

சி-இ)

## நாளை குருபூசை

(யாழ்ப்பாணம்)

தமிழ், சைவம் இரண்டுக்கும் பெரும் பணிபுரிந்தவர் இலக்கணச்சுவாமிகளாகிய ஸ்ரீமத் முத்துக்குமாரத் தம்பிரான் அவர்கள். இச் சைவப் பெரியாரின் குருபூசை நாளை புதன்கிழமை ஈழநாடு ஸ்தாபனத்தில் அனுஷ்டிக்கப்படுகிறது.

## மன்னார் பொலிசுக்குப் புதியவாகனங்கள்

(மன்னார்)

மன்னார் பொலிசாரின் பாவனைக்கென புதிய வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

2 மோட்டார் சைக்கிள்கள் ஒரு ஜீப், ஒரு பவுவுண், ஒரு பவுசா என்பன இப் பொலிசாருக்குப் புதிதாகவழங்கப்பட்டுள்ளன.

(அ)

# மாவட்ட அபிவிருத்தி சபைகளும்-அமைப்பும்

மாவட்ட அபிவிருத்திச் சபைகளின் தேர்தலில்போட்டியிடுவதில்லை என்று ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இறுதிநேரத்தில் முடிவு செய்திருக்கிறது. போட்டியிடுவதென்று முன்னர் ஒரு வாக்கினால் அது தீர்மானித்திருந்தது. இத் தீர்மானத்தைப் புனராலோசனை செய்த சுதந்திரக் கட்சித் தலைமைப்பீடம் போட்டியிடுவதில்லையென்று கடைசி நேரத்தில் முடிவு செய்திருக்கிறது. இலங்கை கம்யூனிஸ்ட்கட்சி ஏற்கனவே மாவட்ட அபிவிருத்திச் சபைகளின் தேர்தலைப்பகிஷ்கரிப்பதென்று அறிவித்துவிட்டது. இதற்கான காரணங்களைத் தெரிவித்து அறிக்கையும் வெளியிட்டது. லங்கா சமசமாஜக் கட்சியும் இத்தேர்தலில் போட்டியிடமாட்டாது என்பது உறுதியாகிவிட்டது.

நாட்டின் இருபத்திநான்கு மாவட்டங்களிலும் ஐக்கிய தேசியக் கட்சி போட்டியிடுகிறது. வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள சகல மாவட்ட அபிவிருத்திச் சபைகளுக்கும் தமிழர் விடுதலைக் கூட்டணி போட்டியிடுகிறது. வடபகுதி மாவட்டங்களில் தமிழ்க் காங்கிரஸ் போட்டியிடுகிறது. வடக்கில் திரு. வசகுமாரசூரியர் தலைமையிலான சோஷலிச முன்னணியும் சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணியும் சுயேச்சைக்குழுக்களாகப் போட்டியிடுகின்றன

மாவட்ட அபிவிருத்திச் சபைகளுக்கான தேர்தல் ஜூன் மாதம் நான்காம் தேதி நடைபெறும்

மாவட்ட அபிவிருத்திச் சபைகள் அமைக்கப்பட்டதும் இப்போது விசேஷ ஆணையாளர்களின் நிர்வாகத்தின் கீழுள்ள பட்டினசபைகளும் கிராமசபைகளும் இயங்கமாட்டா. இவற்றின் பொறுப்புக்களையும் கடமைகளையும் மாவட்ட அபிவிருத்திச்சபைகள் ஏற்றுக்கொள்ளும் ஆனால் நகரசபைகளும் மாநகரசபைகளும் தொடர்ந்து அவைகளுக்குரிய கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றி வரும்.

ஒவ்வொரு மாவட்ட அபிவிருத்திச்சபைக்கும் ஒவ்வொரு நிர்வாகக் குழுவும் இருக்கும். இந்தக் குழுவில் மாவட்ட அமைச்சர் மாவட்ட அபிவிருத்திச் சபைத் தலைவர் ஆகியோருடன் கலந்தாலோசித்து மாவட்ட அமைச்சர் சபை உறுப்பினர்களிலிருந்து இருவருக்குமேற்படாமல் நியமிக்கும் உறுப்பினர்கள் அங்கம் வகிப்பர் நிர்வாகக் குழுவின் தலைவராக மாவட்ட அமைச்சரே இருப்பார். ஜனாதிபதியின் அங்கீகாரத்துடன் சபைத்தலைவருடன் கலந்தாலோசனை செய்து சபை உறுப்பினர் ஒவ்வொருவரின் கடமையையும்பொறுப்பையும் மாவட்ட அமைச்சரே நிர்ணயிப்பார். அபிவிருத்திச்சபையின் ஓர் அங்கமான சபையின் நிர்வாகக் குழு நிர்வாகவேலைகளை நிறைவேற்றும் அதேசமயம் சட்டவாக்கப் பணிகளை சபையின் சகல உறுப்பினர்களையும்கொண்டஅபிவிருத்திச் சபைகள் மேற்கொள்ளும்.

குறிப்பிட்ட மாவட்டத்தின் எம். பி யாக அந்தமாவட்டத்தின் அமைச்சர் இருந்தாலன்றி மாவட்ட அமைச்சர் இச்சபையின் உறுப்பினராக இருக்கமாட்டார்.

மாவட்ட அபிவிருத்திச் சபைகளுக்கான தேர்தல் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையிலேயே நடைபெறும். ஒவ்வொரு அரசியல் கட்சியும் அல்லது ஒவ்வொரு சுயேச்சைக்குழுவும் முதன்மைப் பிரகாரம் வேட்பாளர் பட்டியலை சமர்ப்பிக்க வேண்டும் தேர்தலில் அளிக்கப்படும் மொத்த வாக்குகளில் எட்டில் ஒன்றுக்குக் குறைவாகப் பெறும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சியோ, சுயேச்சைக் குழுவோ தகுதியற்றதாகிவிடும்.

இலங்கையில் இதுவரைகாலமும் அபிவிருத்தித் திட்டங்களோ அவற்றைச் செயல்படுத்தும் அதிகாரங்களோ ஓர் இடத்திலேயே குவிந்திருந்தன. இவற்றைப் பரவலாக்குவதற்கான முயற்சிகள் ஏற்கவே மேற்கொள்ளப்பட்டிருப்பினும் இப்பொழுது உருவாக்கப்பட்டிருக்கும் மாவட்ட அபிவிருத்திச் சபைகள் மூலம் அபிவிருத்திக்குத் திட்டமிடல், நிறைவேற்றுவதல் அவற்றிற்கான தீர்மானங்களை மேற்கொள்ளுதல் ஆகியவற்றில் பொதுமக்களே நேரடியாகப் பங்குபற்றவேண்டுமென்ற நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டே இவை உருவாக்கப்பட்டுகின்றன

மாவட்ட அபிவிருத்திச் சபைகள் அமைக்கப்பட்டு அவை செயல்படத்தொடங்கிய பின்னர் தான் இவற்றின் செயற்பாடுகள் தெளிவாகப் பொதுமக்களுக்குத் தெரியவருமென்று சொல்லலாம்.

பொதுமக்களைப் பொறுத்தவரையில் மாவட்ட அபிவிருத்திச் சபைகளின் அதிகாரங்கள் செயற்பாடுகள் குறித்து இன்னும் சரியான விளக்கம்கொடுக்கப்படவில்லையென்றே சொல்லவேண்டும்.

எஸ். எம். ஜி:

# மக்கள் கருத்து

## சிக்கன மின்பாவனைக்கு!

மின்சார உற்பத்தி மிக மோசமான நிலையை அடைந்து வருவதால் மழை பெய்யாவிடின் இன்னும் சில நாட்களில் நாடு முழுவதுமே இருளில் மூழ்கிவிடும் என்றும் மின் பாவனையைக் கட்டுப்படுத்த அவசரகால அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட இருக்கிறது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் மின்சாரத்தை சிக்கனமாகப் பாவிக்குமாறும் இப்போது பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

இதே வேளையில் வீதிகளில் இரவை பகலாக்கும் விதத்தில் இரவிலும் ஒரு சிலரின் அசிரத்தை காரணமாக வீதிகளில் பகலிலும் எரிந்துகொண்டிருக்கும் மின்சார லைட்டுகளைப் பார்க்கும்போது வேதனையாக இருக்கிறது

சில வீதிகளில் சக்தி கூடிய 'பல்பு'கள் அடுக்கடுக்காகப் போடப்பட்டு எரிந்துகொண்டிருக்கின்றன மின்சார நெருக்கடி காலத்திலாவது அவற்றில் அவசியமில்லாதவற்றை நிறுத்திவைக்கக்கூடாதா? நிலவுக்காலத்திலாவது இவற்றை நிறுத்தக்கூடாதா?

சில இடங்களில் பகலில்கூட 'லைட்டு'கள் எரிந்துகொண்டிருக்கின்றன.

சிக்கன மின்பாவனைக்காக கொழும்பில் இருந்துகொண்டு பொதுமக்களிடம் கோரிக்கை விடுவதுடன் மட்டும் நின்றுவிடாது வீதி விளக்குகளைக் கவனிக்குமாறு உள்ளூராட்சி சபைகளுக்கும் உத்தரவிடக் கூடாதா? உத்தரவிடுவதுடன் மட்டுமல்ல குறிப்பிட்ட ஊழியர்கள் தமது உத்தரவைக் கடைப்பிடிக்கிறார்களா என்றும் கவனிக்கவேண்டும்.

க. சிவபாலசிங்கம்.
கோண்டாவில்.

## மன்னார் தாம்போதியை விஸ்தரிக்க உதவுக

### அரசஅதிபர் மக்களிடம் கோரிக்கை

(மன்னார்)

மன்னார் தாம்போதியை விஸ்தரித்து அழகுபடுத்த மன்னார் மாவட்ட மக்களின் ஒத்துழைப்பு வேண்டும். சுமார் 8 லட்சம் ரூபா பெறுமதியான மன்னார் தாம்போதியை பொதுமக்கள் சிரமதானம் மூலம் விஸ்தரிக்க முன்வர வேண்டும்.

இவ்வாறு மன்னார் பட்டின சபை மண்டபத்தில் மன்னார் தாம்போதியை விஸ்தரித்து அழகுபடுத்துவது தொடர்பாக நடைபெற்ற கூட்டத்தில் தலைமை தாங்கி உரையாற்றிய மன்னார் அரசாங்க அதிபர் திரு. கமிலஸ் பெர்னாண்டோ கூறினார்.

இக்கூட்டத்தில் வர்த்தகர்கள் கிராமமுன்னேற்றச் சங்கப்பிரதிநிதிகள் சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகள், பிரமுகர்கள், சமூக சேவையாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றிய மன்னார் அரசாங்க அதிபர் திரு. கமிலஸ் பெர்னாண்டோ தமதுரையில் கூறியதாவது:

மன்னார் தாம்போதி மன்னார் தீவையும் பிரதான பூமியையும் இணைத்து வைத்துக் கொண்டிருக்கிறது. இத்தாம்போதி சமூக பொருளாதார ரீதியில் மிகவும் முக்கியம் வாய்ந்ததாகும்.

64 ஆம் ஆண்டு வீசிய சூறாவளியின் பின் இத் தாம்போதி அலங்கோலமாகக் காட்சியளிக்கிறது. இதனை உறுதியாகச் செப்பனிட்டு அழகுபடுத்த மன்னார் மாவட்ட மக்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியம் தேவை சகல மக்களும் தமது ஒத்துழைப்பைத் தரவேண்டும் என்றார்.

## சொற்பொழிவுகள்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு மேற்கு நெழுவினி சித்திவிநாயகர் கோவில் வருடாந்த மகோற்சவம் நிறைவடைந்தது உற்சவ தினங்களான 11 நாட்களும் சமயச் சொற்பொழிவுகள் இடம்பெற்றன. இதற்கான ஒழுங்குகளை நெடுந்தீவு இந்து மன்றம் ஒழுங்கு செய்திருந்தது.

இலங்கை மெய்கண்டார் ஆதீனத்தலைவர் அருட்குரு ஞானப்பிரகாசத் தம்பிரான் சுவாமிகள் பதினொரு நாட்களும் சொற்பொழிவு நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கி அருளுரை நிகழ்த்தினார்.

வித்துவான்கள் மு. சபாரத்தினம், பொன். அ. கனகசபை, க. கணபதிப்பிள்ளை, பண்டிதர்கள் சு. பசுபதி, நா. கந்தையா, திருவாளர்கள் நா. செல்லையா, ச. சத்தியவரதன், இராசின்னத்தம்பி ஆகியோர் சமயச்சொற்பொழிவுகள் வழங்கினார்கள்.

(அ)

## இப்படியும் நடக்கிறது

இலங்கை ஒரு உல்லாசபுரி. நீங்கள் இதனை ஏற்றுக் கொள்கின்றீர்களோ இல்லையோ; வெளிநாட்டவர்களுக்கு இலங்கை ஒரு சுவர்க்க பூமிதான் பலவழிகளிலும்!

கடந்த வாரம் ஒரு வெளிநாட்டவர் - உல்லாசப் பிரயாணி, கொழும்பிலுள்ள ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் தங்கினார். "பெரியபுள்ளி" போல் காணப்பட்ட இந்த ஆசாமிக்கு வரவேற்பும் 'தடல் புடலாக' இருந்தது. தினசரி விருந்து நடத்தினார். அதுவும் உயர்ரகவிருந்து! கடைசியில் என்ன நடந்தது தெரியுமா? கொழும்பிலுள்ள ஒரு வெளிநாட்டு ராஜதந்திரியின் பெயர் விலாசத்தைக் கொடுத்து விட்டு நாட்டை விட்டே ஓடிவிட்டார். இதனால் அந்த ஹோட்டலுக்கு பலஆயிரம் ரூபா 'நஷ்டம்' ஏற்பட்டுள்ளது. 'இது' ஆயிரத்தில் ஒன்று என்று கூறலாம்.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் வெளிநாட்டு பெண் உல்லாசப்பிரயாணிகள் சிலர் ஒரு ஹோட்டலில் தங்கினார்கள். பார்வைக்கு இவர்களும் பெரிய புள்ளிகளாகவே காணப்பட்டனர். ஆடம்பரமான விருந்து வைபவங்கள் இடம் பெற்றன. முடிவு என்ன? ஒருநாள் இந்தப் பெண்கள் தங்கியிருந்த அறை பலவந்தமாகத் திறக்கப்பட்டது. அங்கு ஒரு வெற்று சூட்கேஸும் அங்குமிங்குமாக சில ஆடைகளும் காணப்பட்டன. அவ்வளவுதான் ஹோட்டல் மனேஜர் மூளை சுறுசுறுப்படைந்தபோது கிடைத்த தகவல் முதல் நாளே இவர்கள் நாட்டை விட்டுவெளியேறிவிட்டனர்! என்பது தான் இவர்களது 'பில்' எவ்வளவு தெரியுமா? ஏழாயிரம் ரூபா! இப்படி எத்தனை, எத்தனை!

ஊடுருவி.

"தோப்புக்காடுவிபத்து மரணங்களால்

## சீநோர் ஸ்தாபனத்துக்கும் பெரும் நஷ்டம்"

### இயக்குநர் சபை உறுப்பினர் கருத்து

(யாழ்ப்பாணம்)

"படகு விபத்தில் சிக்கி உயிரிழந்தவர்களை நாம் என்றுமே மறக்கமுடியாது. வாழப்பிறந்தவர்கள் வாழாமல் இடைநடுவில்சென்றுவிட்டார்கள். இவர்களுடைய இழப்பு இவர்களுடைய குடும்பத்தினருக்கு மட்டுமன்றி சீ-நோர் ஸ்தாபனத்துக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும் சீ-நோர் ஸ்தாபனத்தின் முன்னேற்றம் தோப்புக்காடு கிராமமக்களைப் பொறுத்தது. சீ-நோர் ஸ்தாபனத்தை இங்கு ஆரம்பித்தது தோப்புக்காடு மக்களின் முன்னேற்றத்தைக் கருதியே இக்கிராம மக்களுக்கு எந்த ஒரு இன்னல் நடைபெற்றாலும் அது சீ-நோர் ஸ்தாபனத்துக்கு ஏற்பட்ட இன்னலாகும்."

இவ்வாறு நோர்வே நிதியுதவித் தலைவரும் சீநோர் இயக்குநர்சபை உறுப்பினருமாகிய திரு. ஆனேபியரோவ் தோப்புக்காடு படகுவிபத்தில் இறந்தவர்களுக்கான அனுதாபக்கூட்டத்தில் உரை நிகழ்த்தும் போது கூறினார்.

மேற்படி படகுவிபத்தில் உயிர்நீத்த 14 பேரையும் நினைவுகூரும் வண்ணம் இக்கூட்டம் தோப்புக்காடு வீட்டுத்திட்ட திறந்த வெளியரங்கில் கடந்த சனிக்கிழமை தோப்புக்காடு கிராமமுன்னேற்றச் சங்கத் தலைவர் திரு. இ. ஜெயராமன் தலைமையில் நடைபெற்றது.

திரு. ஆனேபியரோவ் தொடர்ந்து கூறியதாவது:-

தோப்புக்காடு கிராமமக்கள் பல்வேறுதுறையிலும் பின்தங்கிய நிலையில் இருந்ததினால் இக்கிராமமக்களை முன்னேற்றமடையச்செய்ய வேண்டுமென்ற நோக்கத்திற்காகவே சீ-நோர் ஸ்தாபனம் இங்கு ஆரம்பிக்கப்பட்டது. இறந்தவர்களுடைய குடும்பத்தினருக்கு நான் இங்கு தெரிவிக்கும் இரங்கலுரை எனது சார்பில் மட்டுமல்ல நோர்வே, சுவீடன் தேசத்து மக்கள் சார்பிலும் தெரிவிக்க நான் கடமைப்பட்டுள்ளேன். படகு விபத்துச்சம்பவம் நடக்கும் போது நான் நோர்வேயில் இருந்ததினால் உடனே கலந்து கொள்ளமுடியவில்லை ஆதலால் அங்கிருந்து இவ்விடம் வந்ததும் எனது அனுதாபத்தை தந்திமூலம் தெரிவித்தேன். இந்தக் கூட்டத்திற்காகவே நான் கொழும்பில் இருந்து இவ்விடம் வந்துள்ளேன். இறந்தவர்களுடைய குடும்பத்தினரினதும் இக்கிராம மக்களினதும் பெருளாதார நிலைமை எனக்கு நன்கு தெரியும். அதுதான் இந்த படகு விபத்தில உயிர் நீத்தவர்களுடைய குடும்பத்தினருக்கு நிரந்தரமான நிவாரண நிதியை ஏற்படுத்துவதற்கு நான் முயற்சி எடுத்துள்ளேன். மாதந்தோறும் இறந்தவர்களுடைய குடும்பத்தினர் நிவாரணம் பெறுவதற்கு ஒழுங்கு செய்வேன்.

வட்டு. எம். பி. திரு தா. திருநாவுக்கரசுவின் சார்பில் செயலாளர் நாக. யத்மநாதன் கலந்துகொண்டு இரங்கலுரை நிகழ்த்தும்போது வட்டு. எம். பியின் அனுதாபச்செய்தியையும் கலந்துகொள்ள முடியாமல் போன காரணத்தையும் தெரிவித்து "நிவாரண நிதி சம்பந்தமாக நீங்கள் எடுக்கும் எந்த முடிவுக்கும் என்னுடைய முழுப் பங்கும் உண்டு" என்ற வட்டு எம். பியின் செய்தியையும் வாசித்துக் காட்டினார்.

கல்லூரி அதிபர் திரு. வே. தம்பையா, விரிவுரையாளர் திரு. ஏ. கிரியாத்திலகம், சீநோர் பொதுமுகாமையாளர் திரு. ச. ஸ்ரனிஸ்லாஸ் ஆகியோர் உட்பட இன்னும் பலர் இரங்கலுரை நிகழ்த்தினார்கள்.

தோப்புக்காடு கிராம மக்கள் சார்பில் ஜனாதிபதி நிதியில் இருந்து 25,000 ரூபா ஒதுக்கி கொடுத்தமைக்கு யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. யோகேந்திரா துரைசுவாமிக்கும், ஜனாதிபதிக்கும் நன்றி பாராட்டும் பிரேரணையும் நிறைவேற்றப்பட்டு அவர்களுக்கு அனுப்பிவைப்பதென்று தீர்மானிக்கப்பட்டது.

திரு. ஆனேபியரோவ் இறந்தவர்களுடைய குடும்பத்தினருடைய வடுகளுக்கு நேரில் சென்றும் தனது அனுதாபத்தை தெரிவித்தார். (இ)

## ஆங்கிலத்திலும் வேட்பு மனு

(யாழ்ப்பாணம்)

தமிழர்விடுதலைக் கூட்டணி, தமிழ்க் காங்கிரஸ் இறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணி (சுயேட்சை குழு-2) ஆகியவை நியமனப்பத்திரங்களைத் தமிழ்மொழியில் தாக்கல்செய்தன.

ஐக்கிய தேசியக் கட்சியும், முன்னாள் அமைச்சர் செ. குமாரசூரியரின் சோஷலிச முன்னணியும் நியமனப்பத்திரங்களை ஆங்கிலமொழியில் தாக்கல்செய்திருந்தன. (க)

# டாக்டர் விக்கிரமசிங்காவின் பிறந்தநாள் கூட்டம்

டாக்டர் விக்கிரமசிங்காவின் 80-வது பிறந்ததின விழா யாழ்ப்பாணத்தில் கொண்டாடப்பட்டதல்லவா? வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற இந்தவிழாவில் ஏராளமான மக்கள் கலந்து கொண்டு டாக்டரை வாழ்த்தினார்கள்.

தள்ளாத வயதிலும் மக்கள் சேவையில் அக்கறை கொண்டு பணியாற்றிவரும் டாக்டரின் பாரியாரும் மேடையில் அமர்ந்து மக்களின் ஆரவாரமான கைதட்டல்களையும் பேச்சாளர்களின் பாராட்டுரைகளையும் புன்முறுவலோடு ஏற்றுக் கொண்டார். திரு. பூபாலசிங்கம் டாக்டருக்குப் போர்த்திய பொன்னாடையை திருமதி விக்கிரமசிங்க விரித்துப்பார்த்து மடித்து உறையில் போட்டு வைத்துக் கொண்டார். டாக்டரின் மக்கள்சேவையின் ஒரு சின்னமாக இதனையும் திருமதி விக்கிரமசிங்க அருமை பொருளாகச் சேர்த்து வைத்துக் கொள்வார் என்பதில் சந்தேகமில்லை

டாக்டர் விக்கிரமசிங்கா இத்தனைக்காலம் அயராது மக்கள் சேவையாற்றியமைக்கு திருமதி டொரின் விக்கிரமசிங்காவும் ஒருகாரணம் என்றால் மிகையில்லை. அவரை இத்தனைக்காலம் எமக்குப்பாதுகாத்துத்தந்த அம்மையாரும் பாராட்டுக்குரியவர்தான் என முன்னாள் செனட்டரும் பிரபல சட்டத்தரணியுமான திரு. எஸ் நடேசன் பொருத்தமாகக் குறிப்பிட்டார்

உண்மையான சேவை செய்திறவர்களை மக்கள் மறந்து விடுவதில்லை என்பதற்கு டாக்டர் விக்கிரமசிங்காவின் வாழ்க்கை ஒரு எடுத்துக் காட்டு

செனட்டர் நடேசன் அன்று மிகவும் நகைச்சுவையாகவே பேசினார்.

டாக்டர் விக்கிரமசிங்க பெரிய அதிஷ்டக்காரர் ஏனென்றால் உலகத்தில் மிக அற்புதமான சம்பவங்கள் இடம் பெற்றுள்ள 20-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் அவர் பிறந்தார். மனிதன் சந்திரனுக்கு இந்த நூற்றாண்டில் தான் போனான் இது நடக்கும் என்று யாரும் எதிர்பார்த்திருந்தார்களா? லண்டனில் போய் படிக்கும் சந்தர்ப்பம் அவருக்குக் கிடைத்தது அதன் மூலம் சோவியத் நாட்டில் ஏற்பட்ட புரட்சியைப்பார்த்து அறிய முடிந்தது. இங்கு வந்தபின் சோஷலிசத் தத்துவங்களைப் பரப்பமுடிந்தது. அதையும் விட அவர் ஒரு டாக்டராய் இருந்ததும் ஒரு அதிர்ஷ்டம் தான் இதன் மூலம் சாதாரண மக்களை அவர் சந்திக்கமுடிந்தது. அவருடைய அரசியல் தத்துவத்தை சாதாரண மக்கள் புரிந்துகொள்ளாவிட்டாலும் அவருடைய மருந்தைப் புரிந்து கொண்டார்கள்.

இவ்வாறு திரு. நடேசன் பேசிக்கொண்டுபோனார்.

கலாநிதி சிவத்தம்பி பேசிய போது: கம்யூனிஸ்ட் கட்சியின் மனச்சாட்சியே டாக்டர் விக்கிரமசிங்காதான் என்றார்!

தனிமனிதப் பூசைக்குஇடம் கொடுக்காத ஒரு இயக்கத்தினர் ஒரு தனி மனிதரான டாக்டர் விக்கிரமசிங்காவின் பிறந்தநாளைக்கொண்டாடும் முரண்பாடுபற்றிச் குறிப்பிட்ட அவர் 'தமிழ் வாழ்க' என்று கோஷிப்பதன் நோக்கம் தமிழ் வாழ்ந்தால்தான் தமிழர் வாழமுடியும் என்பது போல் டாக்டர் விக்கிரமசிங்கா போன்றவர்கள் வாழ்ந்தால்தான் அவர் தோற்றுவித்த இயக்கம் வாழமுடியும் என்பதைக் கருத்திற்கொண்டே இம்மாதிரி விழாக்கள் கொண்டாடப்படுகிறது என்றார்.

டாக்டர் விக்கிரமசிங்கா மிகவும் எளிமையானவர் என்று சொன்ன அவர் உப்பு சத்தியாக்கிரகத்தின் போது மகாத்மா காந்தியைச் சந்தித்தது பற்றியோ, சாந்திநிகேதனில் ரவிந்திரநாத் தாகூருடனிருந்தது பற்றியோ அவர் குறிப்பிட்டது இல்லையென்றும் இது தன்னைப் பற்றிப் பெரிதாக விளம்பரப் படுத்திக்கொள்ளாத எளிமைத் தன்மையையே காட்டுகிறது என்றும் சொன்னார்.

திரு. பீட்டர் கெனமன் பேசும்போது சுவையான வேறு சில தகவல்களையும் வெளியிட்டார். டாக்டர் விக்கிரமசிங்கா வெளிநாட்டிலிருந்து


(8-ம்பக்கம் பார்க்க)


## ரொக்குத்தயன்

500 ஈசி

பயிர்களை அழிக்கும்

பீடைகளைக் கட்டுப்படுத்தும்




பயிர்களின் இலை தளிர்களை உண்ணும் பீடைகளை அழிக்க ரொக்குத்தயன் மிகவும் சிறந்தது. நெல், கோவா, உருளைக்கிழங்கு, அன்னாசி, மிளகாய், புகையிலை மற்றும் பயிர்களையும் தாக்கும் வெட்டுப்புழு, அழுக்கணவன் போன்ற பீடைகளையும் கட்டுப்படுத்தும். நம்பிக்கையான வியாபாரிகளிடமே கிடைக்கும்.

தரமான BAYER பாயர் பீடைநாசினிகளைப் பாவியுங்கள்.

இலங்கையில் பாயர் பீடைநாசினிகளைத் தயாரிப்போர்:

ஹேக்கெம் லிமிட்டெட்

400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10.

தொலைபேசி: 93563, 96331-6

melADS

50 மி. லீட்டர் ரூபா 12/- 100 மி. லீட்டர் ரூபா 23/-

450 மி. லீட்டர் ரூபா 78/-

## உழைக்கும் மக்கள் அனைவரும் ஒன்றுதிரளும் மேதினம்

### இடது கம்யூனிஸ்ட் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

"வாழ்க்கைச் செலவின் அதிகரிப்பு, வேலைநிறுத்தம் செய்தவர்களுக்கு வேலைவழங்காதது, வெங்காயம் மினாய் இறக்குமதியினால் வடபகுதி விவசாயிகள் படும் கஷ்டங்கள், சகல மக்களினதும் ஜனநாயக உரிமைகள் பாதிப்புக்கு உள்ளானமை, தமிழ் மக்களின் நியாயமான உரிமைகளைத் தொடர்ந்தும் மறுத்து வருவது போன்ற பிரச்னைகளின் மத்தியிலேயே உலகத் தொழிலாளி வர்க்கத்தின் போராட்டதினமான மேதினத்தை நமது நாட்டு மக்கள் எதிர்கொள்கின்றனர். ஆதலால் எதிர்வரும் மேதினத்தை உழைக்கும் மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு மிகவும் சக்தி மிக்க மேதினமாகக் கொண்டாடுவது அவசியமாகும்."

மேற்கண்டவாறு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) வடபிரதேசக்கமிட்டி மேதினத்தை ஒட்டி வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் கம்யூனிஸ்ட் கட்சி (இடது) தனது ஊர்வலத்தையும் கூட்டத்தையும் இலங்கை தேசபக்த வலிபர் இயக்கம் தலலங்கா தொழிற்சங்கம் ஆகியவற்றுடன் இணைந்து நடாத்தவுள்ளது. ஊர்வலம் நல்லூர் கல்யாண மண்டபத்தில் இருந்து ஆரம்பித்து அரசடி வீதி, தட்டாதெருச் சந்தி, சிவலிங்கப்புளியடிச்சந்தி, ஓட்டுமடச்சந்தி, முள்ளியவல் லூர் வீதி, அலுக்கா வீதி, மானிப்பாய்வீதி, ஸ்ரான்லி வீதி, பஸ்நிலையம் ஆஸ்பத்திரிவீதி, மகாத்மாகாந்திவீதி ஊடாக யாழ் நிம்மர் மண்டபத்தைச் சென்றடையும்.

மேற்படி கூட்டத்திற்கு திரு. கே. ஏ. சுப்பிரமணியம் தலைமைதாங்குவார் திருவாளர்கள் ஏ. ஆர். எட்மன் கே. செந்திவேல், வை. வன்னியசிங்கம் சே. தேவராஜா எஸ். விஜயரட்ணம் கே. தணிகாசலம் கா. டஞ்சலிங்கம் உட்பட பல தொழிற்சங்கப் பிரதிநிதிகள் உரையாற்றுவர். (இ)

## குருபூசையும் உழவாரத் திருப்பணியும்

(யாழ்ப்பாணம்)

அப்பர்சுவாமிகள் குருபூசை விழாவையும் உழவாரத் திருப்பணியையும் யாழ் திருமுறை மன்றத்தினர் 29-ந் திகதி புதன்கிழமை நடாத்தவுள்ளனர்.

உழவாரத் திருப்பணி அன்றைய தினம் காலையும், குருபூசைவிழா மாலையும் இடம் பெறவுள்ளன.

தமிழ்மணி திரு. வி. எஸ் கணேசசுந்தரனின் சொற்பொழிவும் மன்ற மாணவர்களின் திருமுறை பஜனையும் இதில் இடம்பெறவுள்ளன. இதற்கான ஒழுங்குகளை மன்ற அமைப்பாளர் திரு. சி கிருஷ்ணமூர்த்தி செய்துள்ளார். (அ)

## தங்கச் சங்கிலி அறுப்பு சந்தேகநபர் பிணையில்

(பண்டத்தரிப்பு)

கோவில் தேர்த் திருவிழாவில் வயோதிப மாது ஒருவரின் தங்கச் சங்கிலியை அறுத்ததாகக் குற்றம்சாட்டி சங்கானைப் பொலிசாரினால் கைது செய்யப்பட்ட நபரை மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்தபோது நீதிபதி அவரை அடுத்தமாதம் 4-ந் திகதி வரை றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

சண்டிலிப்பாய் சீரணி நாகபூஷணி அம்மன் கோவில் தேர் உற்சவத்தின்போது சுழிபுரத்தைச் சேர்ந்த திருமதி தம்பிமுத்து முத்தாச்சிப்பிள்ளை என்பவரின் 4 ஆயிரத்து 500 ரூபா பெறுமதிமிக்க தங்கச் சங்கிலி அறுக்கப்பட்டது.

இத்திருட்டுச் சம்பவம் குறித்து சங்கானைப் பொலிசார் நாவற்குழியைச் சேர்ந்த ஆறுமுகம் சிவலிங்கம் என்ற நபரைக் கைது செய்து மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் செய்தபோது, அந்நபரை றிமாண்டில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டார். (இ)

## ஒருகுடிகாரக் கணவன் பற்றி இளம் பெண் பொலிஸில் புகார்

### இனிமேல் சேர்ந்து வாழமுடியாதாம்

(பண்டத்தரிப்பு)

மதுவுக்கு அடிமையான தமது கணவர் தமது நகைகளையும் சீதனப்பணத்தையும் வீணாகக் குடிவெறிக்குச் செலவிட்டுவிட்டு, தம்மைத் துன்புறுத்தி வருவதாகவும் இவருடன் இனிமேல் சேர்ந்துவாழத் தம்மால் முடியாதென்றும் 27 வயதுடைய 8 மாதக் கர்ப்பிணிப் பெண் ஒருவர் ஆனைக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். கொக்குவில் வாசியான யோகேந்திரன் ரஞ்சினி என்ற பெண் தமது கணவருடன் தான் இனியும் சேர்ந்து வாழ விரும்பவில்லை என்றும், தான் கொண்டு வந்த நகைகள், சீதனப்பணம் ஆகியவற்றை அவர் குடித்து அழித்துவிட்டார் என்றும், 8 மாதக் கர்ப்பிணியான தமக்கு ஒரு ஆண் பிள்ளை இருப்பதாகவும் தமது முறைப்பாட்டில் மேலும் தெரிவித்துள்ளார். இந்த முறைப்பாடு பற்றி ஆனைக்கோட்டைப் பொலிசார் விசாரணை நடத்தி வருகின்றனர். (அ)

## காப்புறுதி...

(3 ம் பக்கத் தொடர்ச்சி)

கையில் கூறினார். இவ் வைபவத்தில் பிரதம விருந்தினராக யாழ்ப்பண எம் பி திரு வெ யோகேஸ்வரன் கலந்து கொண்டார்.

காப்புறுதி செய்வதில் முதலிடத்தைப் பெற்றுள்ளதென்று திரு. நவரத்தினம் இக் கூட்டத்தில் தெரிவித்தார்.

முதலாவது பரிசுத்தொகையான ஒரு டவுணிளான தங்கப் பதக்கத்தையும் 2000ரூபா பணமுடிச்சையும் திரு ஏ தனபாலராஜாருக்கு திருமதி யோகேஸ்வரன் வழங்கினார் மற்றும் பதின்மூவருக்கும் பரிசுத்தொகைகள் வழங்கப்பட்டன, விழாவில் அபிவிருத்தி முகாமையாளர் திரு. ஆர் கீர்த்திசிங்க உட்படப்பலர் உரையாற்றினர் (அ)

## வெளிநாட்டில் வேலை:

### பணத்தை மீட்டுத்தருமாறு புகார்

(பண்டத்தரிப்பு)

வெளிநாட்டில் வேலைவாய்ப்புப் பெற்றுத்தருவதாகத் தமக்கு உறுதியளித்து தம்மிடமிருந்து 8 ஆயிரம் ரூபாவைப் பெற்றுக்கொண்ட கொக்குவிலைச் சேர்ந்த நபர் ஒருவர் அப்பணத்தில் இதுவரை 4 ஆயிரம் ரூபாவைத் திருப்பித்தரவில்லை என்று ஆனைக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் ஒருவர் புகார் செய்துள்ளார். கொக்குவிலில் தற்போது வசிப்பவரும் மட்டக்களப்பைச் சேர்ந்தவருமான பத்மநாதன் கேசவகுமார் என்ற மேற்படி நபர் தம்மிடமிருந்து 8 ஆயிரம் ரூபாவை வெளிநாட்டில் வேலை பெற்றுத்தருவதாகக் கூறி வாங்கியதாகவும் ஆனால் அவர் அவ்வாறு வேலைபெற்றுத்தரவில்லையென்றும், அதனால் பலத்த முயற்சியின் பின் 4 ஆயிரம் ரூபாவைத் திருப்பிப் பெற்றதாகவும் இது பற்றி விசாரணை நடாத்தி மிகுதிப் பணத்தை அவரிடமிருந்து பெற்றுத்தருமாறும் கொக்குவிலைச் சேர்ந்த சந்திரசேகர ஐயர் ரவீந்திரநாத சர்மா என்பவர் தமது முறைப்பாட்டில் மேலும் தெரிவித்துள்ளார். ஆனைக்கோட்டைப் பொலிசார் இதுபற்றிய விசாரணையில் ஈடுபட்டுள்ளனர்.


# உங்கள் தேவை மின்சக்தியானால்

## அதனை நாம் உங்களுக்கு வழங்குவோம்!

மின்சக்தி பிரச்னையான இன்றைய சந்தர்ப்பத்தில் உங்கள் தொழில்களை சுமுகமான முறையில் நடத்துவதற்கு அவசரத்தில் உதவக்கூடிய
**மின்சக்தி கருவி அத்தியாவசியமானதாகும்**
இத்துறையில் பெயர் பெற்ற உற்பத்தியாளர்களின் நிபுணத்துவ நெருக்கம் கொண்டிருப்பதுடன் உங்கள் குறித்த தேவைக்கு பொருத்தமான எந்த ரகத்திலும் மாதிரியிலுமான ஜெனரேட்டர்களை வழங்கக்கூடியவர்களாகவும் உள்ளோம். இருப்பினும்
**15 KVA முதல் 250 KVA வரையான கொள் அளவு கொண்ட**

## நிஸான் ஜெனரேட்டர் செட்டுகளுக்கு
## (NISSAN GENERATOR SETS)

விசேட நிபுணத்துவமுடையோம்.

நீங்கள் அழைத்தவுடன் எமது பொறியியல் நிபுணர்கள் உங்களை வந்து சந்தித்து உங்களுக்கு தேவைப்படும் உபகரணத்தின் தன்மை பற்றிய அவசிய ஆலோசனையும் வழிகாட்டலும் வழங்குவதுடன். உங்கள் மின்சக்தி தேவையின் அளவைக் கணக்கிட்டு உத்தேச மதிப்பீட்டையும்

## இலவசமாக வழங்குவார்கள்

அதன்பின்னர் மிகக் குறுகிய காலத்தில்
"ஜெனரேட்டர் செட்" ஐ இறக்குமதி செய்து பொருத்தி தருவோம்.
அத்துடன் பாதாந்தம் செயற்பாட்டுப் பரிசோதனைகள் ஒழுங்காக நடாத்தப்படுவதுடன் ஆறு மாத காலத்துக்கு இலவச சேவை யொன்றையும் வழங்குவோம்
மேற்கொண்டு உங்களுக்குத் தேவையான தகவல்களை எம்மிடமிருந்து சுயச்சையாக பெற்றுக்கொள்ளத் தயங்காதீர்கள்!

# யூனி-மெக் இன்ரநாஷனல் லிமிட்

**சிவில் மெக்கானிக்கல் அன்ட் எலெக்ரிக்கல் என்ஜினியேஸ், (B) பில்டேர்ஸ் அன்ட் டெக்கறேட்டேஸ்,**

**22, புல்லேர்ஸ் ரோட், கொழும்பு 7.**

வெலிங்டன் (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி—விஜயா
தங்கப்பதக்கம்

சில தினங்கள் மட்டும்
லிடோ யாழ். நகர்
தினசரி 10-30, 2-15, 4-45, 7-00, & 9-45
PERFECT FRIDAY
(வயதுவந்தவர்களுக்கு)

ஹவுஸ் புல்! ஹவுஸ் புல்!! ஹவுஸ் புல்!!!
ராஜா யாழ்ப்பாணம் சாந்தி மட்டுநகர்
நகரில் திரையிடப்பட்ட படங்களில் முன்னணியில் உள்ளது. பெண்கள் கூட்டம் அலைமோதுகிறது.
தினசரி 10-30, 2-15, 6-15, 9-30. தினசரி 2-30, 6-15, 9-30
● பாக்கியராஜ் ● ரதி ● சதிஷ்
புதிய வார்ப்புகள்
(ஈஸ்ட்மன் கலர்) வயது வந்தவர்களுக்கு உகந்தது
டைரக்ஷன்: பாரதிராஜா இசை: இளையராஜா

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-00, 6-00, & 9-30
★ சிவாஜி ★ ஜெய்கணேஷ் ★ ஸ்ரீதேவி
★ ஜெயசுதா ★ சுந்தரராஜன் ★ சௌகார்ஜானகி
பட்டாக்கத்தி பைரவன்
(வண்ணப்படம்)

மனோகரா தினசரி 10-30, 2-30, 6-00, 9-00
(யாழ்ப்பாணம்)
✶ சிவாஜி ✶ ஸ்ரீதேவி ✶ பிரமிளா
✶ சுந்தரராஜன் ✶ விஜயகுமார்
✶ ரவிச்சந்திரன் மற்றும் பலர் நடித்த
'தீப்பொறி' பறக்கும் வண்ணப்படம்
கவரிமான்

எம்.ஜி ஆர். இரசிகர்களுக்கு ஓர் அரியவாய்ப்பு!
சாந்தி (யாழ்நகர்)
10-30, 2-15, 6-00, 9-45
குறிப்பிட்ட சில தினங்கள் மட்டும்!
அரசிளங்குமரி புத்தம் புதிய பிரதி
மீண்டுமொருமுறை வருமென எதிர்பார்க்காதீர்கள்!
இதுவே யாழ்நகரில் கடைசித்தடவை!!
கடைசிச் சந்தர்ப்பம்!!!

ராணி (யாழ்.நகர்)
தினசரி 10-30, 2-00, 6-00, 9-30
50-வது நாளை நோக்கி
✶ ரஜனிகாந்த் ✶ ஷோபா
✶ ஸ்ரீபிரியா ✶ சுமன்
✶ சௌகார் ஜானகி நடித்த
தீ
இலங்கை-இந்திய தயாரிப்பு

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
3வது வெற்றிகரமான வாரமாக நிறைந்த காட்சி நடைபோடுகிறது.
தினசரி 4 காட்சிகள்
10-30, 2 30, 6-00, 9-30.
✶ சிவாஜி ✶ கே. ஆர். விஜயா
✶ தேங்காய் சீனிவாசன் ✶ மனோரமா
✶ சுந்தரராஜன் நடித்த
ரிஷிமூலம்
(வண்ணப் படம்)
பார்த்தவர்கள் நாவில் என்றும் ஒலிப்பது
"ஐம்பதிலும் ஆசை வரும் ஆசையுடன் பாசம் வரும்"—
காணத் தயாராகுங்கள்


## இன்றைய பலன்

சித்திரை மாதம் 16-ம் திகதி
செவ்வாய்க்கிழமை
28-4-1981)

மேடம்: இருப்பிட மாற்றத்துக்கான ஆலோசனைகள் இடம் பெறும் பிறரின் கவனம் உங்கள் மீது செலுத்தப்படும் அரசாங்க ஊழியரின் உயர்வு காணப்படும்.

இடபம்: வணிகத்துறையில் வாய்ப்புகள் கிடைக்கும் சொத்து விவகாரத்தில் நல்லமுடிவு ஏற்படும் புதுமையான எண்ணங்கள் தலைதூக்கும் ஆதரவுக்கும் இடமுண்டு

மிதுனம்: பணம் பறிபோவதற்கு இடம் ஏற்படும் முகமன் பேசுவோர் விடயத்தில் எச்சரிக்கையுடன் இருக்கவும் அதிகசிரத்தைக் கிடமளிப்பது பிரயாணத்தை பின் போடவும்.

கடகம்: முகமன் பேசிக்கொண்டே உங்கள் முன்னேற்றத்தைத் தடுப்பதற்கு எதிரிகள் முயற்சி செய்வர் கணவன் மனைவி உறவுமுறை பூசல் நிறைந்ததாக இருக்கும்

சிங்கம்: வாழ்க்கை மலர் தூவிய மஞ்சலாகக் காணப்படும் காதல் விவகாரங்களுக்கும் இடமுண்டு சுபதினம்.

கன்னி: திடீர் நடவடிக்கைகள் மேற்கொள்வதன் மூலம் வருந்த நேரிடலாம் தூரத்து செய்தியொன்று உங்கள் துயரத்தில் ஆழ்த்தும் பிணிக்கு இடம் கொடாது இருக்கவும்

துலாம்: படித்தவர்கள் மூலம் பயனடைவீர்கள் மாதுருவழிப் பெருமையும் உண்டு சிலர் புதுமனைகட்டுவதற்கும் ஆலோசனை செய்யலாம்.

விருச்சிகம்: இன்பத்தின் அணைப்பில் இதயத்தை பறிகொடுப்பீர்கள் பிரமச்சாரிகளின் வாழ்க்கையில் காதல் கனைதாக்கும் குடும்பஸ்தவர்களுக்கும் சுவையான சம்பவங்கள் உண்டு கவர்ச்சிகரமான தினம்.

தனு: ஏமாற்றத்துக்கு இடமுண்டு சூழ்ச்சிவலை விரிக்கப்படும். சத்துருக்களால் கவலை அதிகரிக்கும் பிரயாணத்தை பின்போடவும்.

மகரம்: உவகைதரும் சம்பவங்கள் இடம் பெறும் உறவினர் உங்களை உற்சாகப்படுத்துவார்கள் குடும்பத்தவர்களின் வாழ்க்கையில் இனிமை தவழும் சிலர் வாழ்க்கையில் காதலும் அரும்பும்.

கும்பம்: கோஷ்டிச் சண்டையில் உங்களையும் மாட்டிவிடுவதற்குச் சிலர் முனையக்கூடும் கொடுக்கல் வாங்கல் மூலம் பகை உருவாகலாம் மேலதிகாரியின் கோபத்துக்கு இலக்காவீர்கள் துக்கதினம்.

மீனம்: கொள்கை வழி வாழ்க்கையை வளப்படுத்துவதில் மகிழ்ச்சியடைவீர்கள் சிலர் வாழ்க்கையில் பொது சனத்தலைமைக்கும் இடமுண்டு நீண்டநாள் எதிர்பார்த்த செய்தி இன்று கிடைக்கலாம்.

சோதிடக் கலாநிதி
திருமதி
க. வேலுப்பிள்ளை


நாகம்ஸ் (மன்னார்)
தினசரி 6-30 9-30
சனி, ஞாயிறு 2-30
எம் ஜி. ஆர்.-லதா
மீனவ நண்பன்
(ஈஸ்மன் கலர்)

வெஸ்லி (யாழ்ப்பாணம்)
தினசரி 6-15, 9-30,
சனி ஞாயிறு 2-30
எம். ஜி. ஆர் —லதா
உலகம் சுற்றும் வாலிபன்
(புதியபிரதி-கலர்)

ஹரன் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த் — ஷோபா நடித்த
முள்ளும் மலரும்
போன்:331 (கலர்)


# யாழ். மாவட்டத்தில் பெண்மணி ஒருவர் போட்டி!

(யாழ்ப்பாணம்)

சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணியினர் (சுயேச்சை குழு 2) பட்டியலை, திரு. பி ஜே அன்ரனி நேற்றுக்காலை தாக்கல் செய்தார்.

பட்டியல் பெயர் விபரம் வருமாறு:

1. பி ஜே அன்ரனி (அதிபர்)-யாழ்ப்பாணம்
2 சட்டத்தரணி பி. சதாசிவரத்தினம்-மானிப்பாய்.
3. எம் வி நடராசா (தொழிற்சங்கவாதி) - கோப்பாய்.
4 திருமதி ஏ. ஜெயசிலி -ஊர்காவற்துறை
5. சி மகேஸ்வரன் (விவசாயம்) - சங்கானைத்துறை
6 சி கிருஷ்ணன் (விவசாயம்) -யாழ்ப்பாணம்
7. கா. யோகராசா (வியாபாரம்) - பருத்தித்துறை
8 கே. சின்னத்தம்பி (சிற்பனையாளர்) - வட்டுக்கோட்டை.
9 யோ. விர்மட் (ஓய்வுபெற்ற அரசாங்க ஊழியர்) - நல்லூர்.
10- வ ஜெயராசா (வியாபாரம்)-சாவகச்சேரி
11 க புவிலிங்கம் (வியாபாரம்)-யாழ்ப்பாணம்.
12 என் தவகுலரத்தினம் (வார்ப்பு வேலை) - யாழ்ப்பாணம்
13 அ கயித்தாம்பிள்ளை (விவசாயம்) - வட்டுக்கோட்டை
14. மு. செல்லத்துரை (மாணவன்) - காங்கேசன்துறை. (இ)

## தொலை தொடர்பு கடன் வழங்கு சபை உறுப்பினர்

(யாழ்ப்பாணம்)

யாழ் பிரதேச தொலைத் தொடர்புப் பொறியியலாளர் கடன் வழங்கு சபை அலுவலகத்திற்கான தேர்தல் நடைபெற்றபோது பின்வருவோர் உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் வ சுதிரமலை, கு சிவஞானம், வீ. சண்முகரத்தினம், பொ. தில்லைநாதன், சி. இராசையா.

போட்டியின்றி எஸ். கே. இராசையா, கு ஈசுவரானந்தன், திருமதி சி ம. சுகாகாமநாதன், திருமதி ம. செல்வமாணிக்கம் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். (ஈ)

## ஒட்டுசுட்டானில் கலைவிழா

(மாங்குளம்)

"மன்றம் ஆரம்பித்த ஓர் ஆண்டுக்குள்ளாகவே இப்படியான சிறப்புமிக்க கலைநிகழ்ச்சிகளை உள்ளடக்கியதனை பெரும் கலை விழாவினை நடத்துவது ஒரு சாதனையாகும்" என்று ஒட்டுசுட்டான் சின்னத்தம்பி வித்தியாலயத்தில் நடைபெற்ற சிவசக்தி கலாமன்றத்தின் கலை விழாவில் அதிபர் ஆ தா ஆறுமுகம் தமது ஆசியுரையில் குறிப்பிட்டார் கலாமன்றத்தலைவர் முல்லைமணி வே சுப்பிரமணியம் தலைமையில் விழா நடைபெற்றது.

"கண்ணகியா சீதையா கற்பிற்சிறந்தவர்" என்னும் தலைப்பிலான பட்டிமன்றத்தில் கண்ணகியின் சார்பில திரு சி. தெய்வேந்திரம்பிள்ளை செல்வன்கள் த. புவிமகன், ஸ்ரீ பாலமுருகன் ஆகியோரும் சீதையின் சார்பில் திரு. ந தர்மலிங்கம், செல்வன்கள வே சிவச்சந்திரகாந்தன், சு உத்தரகுமார் ஆகியோரும் வாதிட்டனர். கலை நிகழ்ச்சியாக திரு ஆ மௌனசாமியின் புல்லாங்குழல் இசையும் திரு இ மலையாண்டியின் மெண்டலின் இசையும் செல்வன் சு. செல்வக்குமாரின் மல்லிசையும் இடம்பெற்றன

கவிஞர் சி நடராஜன் தலைமையில "சிறுமை கண்டு பொங்குவாய்" எனும் தலைப்பில் நடைபெற்ற கவியரங்கில் கவிஞர்கள் வை சிவசுந்தரலிங்கம், கு சதாசிவம், சி வேதவனம், சி போகராசா ஆகியோர் கவிபாடினர் ஒட்டுசுட்டான் மகாவித்தியாலய மாணவிகளின் "ஒரு விவசாயின் கதை" வில்லிசையும் செல்வன் ம இராசநாயகத்தின் நகைச்சுவை நிகழ்ச்சியும் கலாமன்றக் குழுவினரின் 'வீட்டில நடந்த வீரம்' என்னும் நாடகமும் கற்சிலைமடு பண்டாரவன்னியன் கலாமன்றத்தின் "பாசத்தின் முடிவு" என்னும் சமூக நாடகமும் மேடையேறின. (அ)

## கூட்டணிப் பட்டியலில் கிருஷ்ணராசா

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ் மாவட்டத்திற்கான பட்டியலில் கிளிநொச்சியை சேர்ந்த திரு. இ. கிருஷ்ணராசவுக்கு இடம் வழங்கப்பட்டுள்ளது

ஏற்கெனவே வெளியிடப்பட்டிருந்த 11ம் இடத்தில் கிளிநொச்சியைச் சேர்ந்த இரத்தினம் இடம்பெற்றிருந்தார். நேற்றுத் தாக்கல்செய்யப்பட்ட பட்டியலில் 1ம் இடத்தில் திரு இரத்தினத்திற்குப் பதிலாக திரு.கிருஷ்ணராசா இடம் பெற்றுள்ளார். வேறு மாற்றங்கள் எதுவும் இல்லை.

சோஷலிச முன்னணிபட்டியலில் 6-ம் இடத்தில வி. நடராசாவிற்கு பதிலாக வி தர்மலிங்கம் என்பவரின் பெயர் இடம் பெற்றிருந்தது. 9 ம் இடத்தில் க வல்லிபுரத்திற்குப் பதிலாக வ. கந்தசாமி என்பவரின் பெயர் இடம் பெற்றிருந்தது

ஐக்கிய தேசியக்கட்சி, தமிழ் காங்கிரஸ் பட்டியலில் ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்ததுபோல் பெயர்கள் இருந்தன எவ்விதமாற்றமும் செய்யப்படவில்லை. [ ]

## குமார் சுகவீனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலுக்கான காங்கிரஸ் வேட்பாளர் பட்டியலை தமிழ் காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு. குமார் பொன்னம்பலம் நேற்றுக் காலை திடீர் சுகவீனமுற்றதால் காங்கிரஸ் பட்டியலில் 2ம் இடத்தைப் பெற்றுள்ள சட்டத்தரணி ஆர் ஜே செல்வரத்தினம் தாக்கல் செய்தார். (அ)

## மாணவர்விடுதியும் நீச்சல்குளமும் அமைக்கப்படும்

(மட்டுவில்)

சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் விரைவில் மாணவர் விடுதி அமைக்கப்படவிருக்கிறது அத்துடன் ஒரு நீச்சல் தடாகமும் அமைக்கப்படவுள்ளது. இத்தகவலைக் கல்லூரி அதிபர் திரு பூ வெற்றிவேலு வெளியிட்டார்.

கல்லூரி அபிவிருத்திச்சபைக் கூட்டத்தில் தலைமைவகித்துப் பேசும்போது திரு. வெற்றிவேலு இத்தகவலைத் தெரிவித்தார்.

விவசாயப்பாடத்தை ஒரு பாடமாக கல்லூரியில் கற்பிக்கவேண்டும் என வடமாநிலக் கல்விப்பணிப்பாளர் பணிப்பைத் தொடர்ந்து விவசாயம் கோழிவளர்ப்பு முதலான முயற்சிகளும் இக் கல்லூரியில் மேற்கொள்ளவுள்ளதாகவும் இதற்குத்தண்ணீர் வசதியுள்ள ஒரு ஏக்கர் நிலத்தைப்பெறும் முயற்சியில் தாம் ஈடுபட்டுள்ளதாகவும் அதிபர் தெரிவித்தார். [ச]

ஈழநாடு
The Eelanaadu 60 சதம்

நீர்வேலி மரணம்:

## இன்று விசாரணை

(யாழ்ப்பாணம்)

நீர்வேலியில் பொலிசாரி மரணம்தொடர்பான விசாரணையில் நேற்று சட்டவைத்திய அதிகாரி டாக்டர் சரவணபவானந்தன் அறிக்கை சமர்ப்பித்தார்.

யாழ். நீதிமன்றத்தில் நீதவான் ரி. போகநாதன் முன்னிலையில், நேற்று இவ் விசாரணை எடுத்துக்கொள்ளப்பட்டு, இன்றுவரை ஒத்திப் போடப்பட்டுள்ளது. (க)

## செல்லத்தம்பு ஆஸ்பத்திரியில்

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு எம். பி. திரு. எக்ஸ் எம். செல்லத்தம்பு சுகவீனமுற்று யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைபெற்று வருகின்றார். (சி)

### டாக்டர் விக்கிரமசிங்கா

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

நாடு திரும்பியதும் சூரியமல் இயக்கத்தை ஆரம்பித்தார். இதன் முதல் தலைவராக திருமதி டொரின் விக்கிரமசிங்காவே இருந்தார். இந்த இயக்கத்தின் நினைவாக தங்களுக்குப் பிறந்த முதல் குழந்தைக்கு "சூரிய" என்று பெயர் சூட்டினார்கள் என்று அவர் சொன்னார்.

டாக்டர் விக்கிரமசிங்கா ஒருவரே தென்னிலங்கையில் கொள்கை மாறுமல் தமிழ் மக்களின் உரிமைகளுக்காகக்குரல் கொடுத்து வருகிறார். அவர் தம் நிலையிலிருந்து ஒருபோதும் தளர்ந்ததில்லை. சிலசமயம் உள்கட்சிப் போராட்டத்தில் கூட அவர் இறங்கியிருந்ததை அறிவோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார்.

மண்டபத்தில் கட்சி அரசியலுக்கு அப்பாற்பட்ட பலரும் குழுமியிருந்தது டாக்டர் விக்கிரமசிங்காவின் மீது யாழ்ப்பாண மக்கள் கொண்டுள்ள மதிப்பையே எடுத்துக்காட்டியது.

'பேனு'

★ யமஹா! (YAMAHA) யமஹா!! (YAMAHA) யமஹா !!! (YAMAHA)

யமஹா மோட்டார் சைக்கிள் உரிமையாளர்களுக்கு ஜெனரல் மாக்கெற்றிங் ஓகனேசேஷன் ஸ்தாபனத்தாரின் அழைப்பிதழ்

வடமாகாண ஏக விநியோகஸ்தர்களாகிய எங்களுடன் இறக்குமதியாளர்களாகிய கொன்சொலிடேற்றெட் இஞ்சினியரிங் கொம்பனி லிமிட் ஸ்தாபனத்தாரும், யமஹா மோட்டார் சைக்கிள் உற்பத்தியாளர்களும் இணைந்து நடாத்தும் யமஹா மோட்டார் சைக்கிள் பழுது பார்த்தற் சேவை (28-4-81) இன்று மாலை 2-30 மணி முதல் ஒரு வாரத்திற்கு கீழ்க்காணும் விலாசத்தில் நடைபெறும் என்பதை சகலருக்கும் மிக மனமகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

ஜெனரல் மாக்கெற்றிங் ஓகனேசேஷன்,
34, பாங்சோல் வீதி,
யாழ்ப்பாணம்.

9008

## யாழ். மாவட்டத்தில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஜெயசீலியும், மற்றும் வேட்பாளர்களும் வந்திருந்தனர். திரு. பி ஜே. அன்ரனி மற்றும் வேட்பாளர்களுக்கு ஆதரவாளர்கள் மாலைசூட்டி வரவேற்றார்கள்.

### ஐ தே கட்சி வேட்பாளர்கள்

காலை 11-40 மணிக்கு ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் திரு. க கணேசலிங்கம் வேட்பாளர் திரு. தியாகராசா, திரு. சந்திரசேகரம் திரு. கு. குணரத்தினம் ஆகியோர் ஆதரவாளர்களுடனும் மற்றும் வேட்பாளர்களுடன் வந்து சேர்ந்தனர். திரு. தியாகராசா ஐக்கிய தேசியக் கட்சியின் நியமனப்பத்திரத்தை தாக்கல் செய்தார்.

திரு கணேசலிங்கமும் வேட்பாளர்களும் வெளியில் வந்தபோது ஆதரவாளர்கள் போட்டி போட்டிக் கொண்டு வேட்பாளர்களுக்கு மாலை சூட்டினார்கள் "ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஜே" என்று கோஷமெழுப்பனார்கள். பெருந்தொகையான பச்சை மாலைகளைச் சூட்டி வேட்பாளர்களான திரு. ஏ. தியாகராசா திரு. சந்திரசேகரம் திரு. குணரத்தினம் ஆகியோரை தூக்கிக்கொண்டு ஊர்வலமாக வீதிக்குச் சென்றார்கள்.

### சோஷலிச முன்னணி

அச்சமயம் தேர்தல் சின்னம் பெறுவதற்காகவந் சோஷலிச முன்னணித் தலைவரும், முன்னாள் அமைச்சருமான திரு. செ. குமாரசூரியர் வாசலில் திரு. ஆறுமுகத்துடனும் ஆதரவாளர்களுடனும் வந்துகொண்டிருந்தார் ஐ தே க. வேட்பாளர்களை ஆதரவாளர்கள் தூக்கி வந்ததால் திரு. குமாரசூரியர் பிரதான வாசலில் அவர்கள் அவ்விடத்தை விட்டுச்செல்லும்வரை காத்து நின்றுவிட்டு அதன் பின்னரே உள்ளே வந்தார்.

### தராசு

திரு. குமாரசூரியர் விரும்பி கேட்ட சின்னமான தராசு அவர் குழுவிற்கு வழங்கப்பட்டு அவர் குழுவை "சுயேச்சை குழு-1" என்றும் அறிவிக்கப் பட்டது.

### குடை

சிறுபான்மைத் தமிழர் ஐக்கிய முன்னணி சார்பில் திரு. பி. ஜே. அன்ரனி விரும்பிக் கேட்ட சின்னமான குடை அக்குழுவிற்கு வழங்கப்பட்டு "சுயேச்சைகுழு-2" என்று அறிவிக்கப்பட்டது.

நண்பகல் 12 மணிக்கு பின்னர் நியமனப்பத்திரங்கள் உத்தியோகபூர்வமாகஏற்றுக்கொள்ளும் சமயம் கூட்டணி சார்பில் திரு அ. அமிர்தலிங்கம், திரு எஸ் நடராசா, திரு சி நாகராசாஆகியோரும், தமிழ்க்காங்கிரஸ்சார்பில் திரு. எஸ். ஆர். கனகநாயகம், திரு. ஆ ஜோ. செல்வரத்தினம் ஆகியோரும், ஐ. தே. க. சார்பில் திரு. கணேசலிங்கம், திரு. சந்திரசேகரம், திரு. குணரத்தினம் ஆகியோரும் சமுகமளித்திருந்தனர்.

நியமனப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டபின்னர் ஒவ்வொரு கட்சியினரையும், குழுவினரையும் ஆதரவாளர்கள் அழைத்துச்சென்றனர்.

### மகிழ்ச்சி ஆரவாரம்

சிறுபான்மை தமிழர் சபை முன்னணிவேட்பாளர், ஊர்வலமாக கொடும்வெய்யிலில் மூளைவைச்சந்திக்கு நடந்துசென்றனர் அங்கு ஆதரவாளர்கள், வெடிகொளுத்தி மாலைசூட்டி வரவேற்று மகிழ்ச்சியாரவாரம் செய்தனர் பெண்வேட்பாளரான திருமதி ஜெயசீலிக்கு குழந்தைகள் மாலைசூட்டினர். தமிழ்க்காங்கிரஸ்வேட்பாளர்கள் குருநகருக்கு சென்று அமரர் ஜி ஜி பொன்னம்பலம் சிலைக்கு மாலைசூட்டி அஞ்சலி செலுத்தினார்கள்.

கச்சேரிப்பகுதியில் பலத்த பொலிஸ்பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. எதுவித அசம்பாவிதமும் இடம்பெறவில்லை. (க)

## நாவாந்துறை சென் நீக்கிலஸ் திருநாள்

[யாழ்ப்பாணம்]

நாவாந்துறை புனிதமூனிந்திரர் திருவிழ 9ம் தினமான இன்று மாலை நற்கருணைப் பவனியும் ஆசிர்வாதமும் இடம் பெறும்.

நாளை புதன் காலை திருநாட் கூட்டுத் திருப்பலியும் புனிதரின் தேர்த்திருப்பவனியும் திருச்சுரூபஆசிர்வாதமும் இடம் பெறும. பங்குத்தந்தை அருட்திரு இம்மனுவல் அடிகளார் தலைமையில் ஆராதனைகள் நடைபெற்றுவருகின்றன. [அ]

விற்பனைக்கு

புதிய குறுன்டிக் 20 அங்குல கலர் டெலிவிஷன் J. V. C. விடியோ. தொடர்பு; 17, பலாலி றோட், யாழ்ப்பாணம்.

9007

## கூட்டணி மேதினக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக்கூட்டணியின் மேதினக்கூட்டம் யாழ். மத்தியக்கல்லூரி மைதானத்தில் ஊர்காவற்றுறை எம். பி கா. பொ இரத்தினம் தலைமையில் நடைபெறும்.

ஊர்வலம் நாச்சிமார் கோவிலடியில் இருந்து ஆரம்பமாகி கூட்ட மைதானத்தை சென் நடைபெறவுள்ளது. இந்த ஊர்வலத்தில் பல்வேறு தொழிற்சங்கங்களும் கலந்துகொள்ள இருக்கின்றது.

இக்கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ அமிர்தலிங்கம் உட்பட கூட்டணி எம் பிக்களும் தொழிற்சங்கப் பிரதிநிதிகளும் சொற்பொழிவாற்றுவர். (சி-இ)

## நூல்கள் அறிமுகமும் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

டாக்டர் ஜே. ரீ. சேவியர் எண்ணிய தலாண்ட ஒவ் லெடடேர் நூல் அறிமுகமும் இந்து சமயத்தின் மூலமொழி என்னும் நூல் வெளியீட்டுவிழவும், யாழ். வீரசிங்கம மண்டபத்தில் அடுத்தமாதம் 2ம் தேதி நடைபெறவிருக்கிறது.

திரு. எம். சி. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவிருக்கும் இவ் விழாவில் எதிர்க்கட்சித்தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம், யாழ் எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன், சட்டத்தரணி செல்வி. எல். ஜே மாணிக்கம் திரு. என், சங்கரப்பிள்ளை. திரு. எஸ். வேலாயுதம், திரு. ஏ வி. அன்ரன், ஆகியோர் அணிந்துரை வழங்குவார்கள்.

கலாநிதி அ. சண்முகதாஸ் நூலை அறிமுகம்செய்துவைப்பார் கலாநிதிஜேயஸ்ரி இரத்தினம் நூலை வெளியிடுவார்.

பேராசிரியர் கா கைலாசநாதக் குருக்கள், பேராசிரியர் கா. இந்திரபாலா, பேராசிரியர் க. கைலாசபதி ஆகியோர் ஆய்வுரை நிகழ்த்துவார்கள். (க-வி)

## சந்திரசேகரம் ராஜினாமா

(யாழ்ப்பாணம்)

மாவட்டஅபிவிருத்திச்சபை தேர்தலில் யு. என். பி சார்பில் போட்டியிடுவதற்காக பருத்தித்துறை நகரசபை யு என். பி உறுப்பினர் திரு சந்திரசேகரம் உறுப்பினர் பதவியை நேற்றுக்காலை ராஜினாமா செய்தார்.

ராஜினாமாக்கடிதத்தைஅவர் நேற்றுக்காலை தேர்தல் அதிகாரியிடம் கையளித்தார். (கு)

அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்
கூட்டுத்தாபன விற்பனை முகவர் நிலையம்

கூட்டுத்தாபனத்தின் சேவையை மேலும் விரிவாக்கும் நோக்குடனும், பொதுமக்களுக்கு மேலும் வசதிகளை அளிக்கும் நோக்குடனும், கீழ்க்காணும் முகவர் நிலையங்கள் கூட்டுத்தாபனத்தால் நியமிக்கப்பட்டுள்ளன.

(1) நல்லூர் ப. நோ. கூ. சங்கம்
(2) அச்சுவேலி ப. நோ. கூ. சங்கம்,
(3) பருத்தித்துறை ப. நோ. கூ சங்கம்,
(4) ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம்,
(5) திரு. ஏ. கே. சிவஞானம், இராச வீதி, கோப்பாய்,
(6) தென்மராட்சி ப. நோ கூ. சங்கம்,
(7) திரு சி. சரவணபவன், பலாலி வீதி, கோண்டாவில்,

இவ்விற்பனை நிலையங்கள் கூட்டுத்தாபனத்தின் கட்டுப்பாட்டிற்குள் இயங்கி, கூட்டுத்தாபன விற்பனை விலைக்கே வியாபாரம் நடாத்தும் என்பதையும், பொதுமக்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளும் பணத்திற்கு கூட்டுத்தாபன பணவிற்பனைச் சிட்டை முகவர் நிலையங்களால் வழங்கப்படும் என்பதையும் பொதுமக்களின் கவனத்திற்கு அறியத் தருகின்றேன்.

பிரதேச முகாமையாளர்,
வடபிரதேசம்,
அரசாங்க மரக் கூட்டுத்தாபனம்,
25, கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 349
யாழ்ப்பாணம்

9004

மரண அறிவித்தல்

ச. வீரசிங்கம்

முன்னாள் புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி அதிபர் திரு. ச. வீரசிங்கம் பருத்தித்துறை தும்பளையில் காலமானார். அன்னார் திருவாளர்கள் தர்மசங்கரி, கணேசசங்கரி, இராசசங்கரி, கிளிநொச்சி எம். பி ஆனந்தசங்கரி, சகாதேவசங்கரி, பரதசங்கரி, ஞானசங்கரி, துருவசங்கரி திருமதிகள் மதியாபரணம், லோகநாயகி, திருநெல்நாயகி காலஞ்சென்ற மங்கையர்க்கரசி ஆகியோரின் தந்தையாவார் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

8998

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் [illegible] ஏப்பிரல் 28-ந் திகதி [illegible] வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under No. [illegible] The Eelanaadu [illegible] Telegrams: "Eelanaadu" Phone: [illegible]